# சமூக அறிவியல்

## ஒன்பதாம் வகுப்பு

**அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளி**

**அவிநாசி.**


**PREPARED BY**

**R . BALAMURTHY M.A. , B . Ed. , &**

**S . KAVITHA M.A. , B .Ed ,**

**BT ASST .,**

**GBHSS , AVINASHI .**

# வரலாறு

## அலகு 1 : மனிதப் பரிமாண வளர்ச்சியும் சமூகமும் வரலாற்றுக்கு முந்தைய காலம்

**சுருக்கமான விடையளி.**

**1. சிந்தனைகளின் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது ?**

❖ சிந்தனைகளின் காலத்தில் அனைத்து துறைகளிலும் ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் மனிதர்களிடையே தோன்றியது.

❖ அவர்கள் இயற்கை, தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் உலகம் குறித்து சிந்திக்கவும் கேள்வி எழுப்பவும் தொடங்கினர்.

**2. வரலாற்றுக்கு முந்திய கால தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு எழுதுக.**

❖ தமிழக மக்கள் கால்நடைகளை பழக்கப்படுத்தி வேளாண்மை செய்தனர்.

❖ கால்நடைகளின் எலும்புகளால் ஆயுதங்கள் தயாரித்தனர்.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு**

❖ கற்திட்டை, கல்லறைகள், நினைவுச் சின்ன குத்துக்கல், குகைகள், ஈமத்தொட்டிகள்.

**4. கீழைப் பழைய கற்கால மக்களிடமிருந்த கருவி செய்வதற்கான தொழில்நுட்பத்தை திறனாய்வு செய்க.**

❖ பெரிய கற்களைச் செதில்களாக சீவி கைக்கோடாரி செய்தனர்.

❖ கைக்கோடாரி, வெட்டுக்கத்தி, போன்ற இருமுகக் கருவிகள் செய்தனர்.

**விரிவான விடையளி**

**1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் உறுதிபடுத்தவும்.**

**விவசாயம்**

❖ தினை, நெல் பயிரிடப்பட்டன.

❖ பாசன நிருவாகம் மேம்பட்டது.

**பானை செய்தல்**

❖ மிக முக்கிய சான்று மட்பாண்டங்கள்.

❖ சமையல் செய்ய, பொருட்களை சேமிக்க, சாப்பிட மட்பாண்டங்களை பயன்படுத்தினர்.

❖ கருப்பு மற்றும் சிவப்பு நிறங்களைப் பயன்படுத்தினர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**உலோகக் கருவிகள் செய்தல்**

- ❖ வாள், கோடாரி, உளி, விளக்குகள் போன்றவைகள் செய்தனர்.
- ❖ இவைகள் போர் கருவிகளாவும் வேட்டையாடவும் மற்றும் வேளாண்மைக்காகவும் பயன்படுத்தப்பட்டன.

**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது– தெளிவுப்படுத்துக.**

- ❖ மனிதர்களின் வரலாற்றை புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.
- ❖ வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் புவியில் பொதிந்து கிடக்கின்றன.
- ❖ இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகள் புதை படிவங்களாக புதைந்துள்ளன.
- ❖ புவி மற்றும் பல்வேறு உயிரினங்களின் வரலாற்றை அறிய இச்சான்றுகள் மிக முக்கியமானவை.

## அலகு 2 : பண்டைய நாகரிகங்கள்

### சுருக்கமான விடையளி

**1. எகிப்தியர்கள் கலை கட்டடக்கலையில் திறன் பெற்றவர்கள் விளக்குக.**

- ❖ எகிப்தில் காணப்படும் எண்ணற்ற சிற்பங்கள், ஓவியங்கள், படைப்புகள் எகிப்தியர்களின் கலையாற்றலுக்கு சான்று ஆகின்றன.
- ❖ இவை எகிப்தியர்களின் பொறியியல் ஆற்றல், கட்டுமான ஆற்றல், மனித ஆற்றல் ஆகிய திறன்களை வெயிப்படுத்துகின்றன.

**2. சிகுராட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.**

- ❖ பண்டைய மெசபடோமியாவில் காணப்பட்ட பிரமிடு வடிவ கோவில்
- ❖ நகரின் மையத்தில் காணப்பட்டது.

**3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும்–விவரி.**

- ❖ மெசபடோமியாவில் ஹமுராபியின் சட்டத்தொகுப்பில் பல்வேறு குற்ற வழக்குகள் குறித்து 282 பிரிவுகள் உள்ளன.
- ❖ "கண்ணுக்கு கண்" "பல்லுக்குப் பல்" என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது

### விரிவான விடையளி

**1. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.**

- ❖ திட்டமிட்ட நகர அமைப்பு, கழிவு நீர் கால்வாய்கள், திட்டமிட்ட தெருக்கள்.
- ❖ மொஹஞ்சதாரோவின் மாபெரும் குளியல் குளம், நெற்களஞ்சியம்.
- ❖ கோதுமை, பார்லி, பயிரிட்ட சிறந்த வேளாண்மை.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ஓவியங்கள் தீட்டப்பட்ட மண்பாண்டங்கள்.
- உலோகக் கருவிகள், எலும்பு தந்தத்தால் ஆனப் பொருட்கள்.

**2. ஹைரோகிளிபிக்ஸ், கியூனிபார்ம்– இவற்றை அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்குக.**

| ஹைரோகிளிபிக்ஸ் | கியூனிபார்ம் |
|---|---|
| எகிப்திய நாகரீகத்தின் புகழ்பெற்ற எழுத்து முறை. | மெசபடோமியாநாகரீகத்தின் புகழ்பெற்ற எழுத்து முறை. |
| சித்திர வடிவம் கொண்டது. | ஆப்பு வடிவம் கொண்டது. |
| கி.மு. 3000 ல் உருவாக்கப்பட்டது. | கி.மு. 3000 ல் உருவாக்கப்பட்டது. |
| ரொசெட்டாகல்லில் பொறிக்கப்பட்டது. | சுட்ட களிமண் பலகைகளில் காணப்படுகின்றன. |
| நினைவுச் சின்னங்கள், முத்திரைகளில் பயன்படுத்தப்பட்டது. | வணிக பரிமாற்றங்கள், கதைகள், கடிதங்கள் எழுத பயன்படுத்தப்பட்டது. |

**3. தத்துவம் இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்த அளவில் ஆனது என்பதைக் கூறு.**

**<u>லாவட்சு :</u>**

- தாவோயிசத்தைத் தோற்றுவித்தவர்.
- ஆசைதான் அத்தனை துன்பங்களுக்கும் மூலக்காரணம் எனக் கூறினார்.

**<u>கன்பூசியஸ் :</u>**

- சீனாவின் புகழ்பெற்ற தத்துவஞானி .
- தனிப்பட்ட வாழ்க்கை சீர்திருத்தப்பட்டால் குடும்பமும் தேசமும் முறைப்படுத்தப்பட்டு விடும் என்றார்.

**<u>மென்சியஸ் :</u>**

- சீனாவின் புகழ்பெற்ற மற்றொரு தத்துவஞானி.
- சீனா முழுவதும் பயணம் செய்து ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறினார்.

## <u>அலகு 3 : தொடக்க கால தமிழ்ச் சமூகமும் பண்பாடும்</u>

**<u>சுருக்கமான விடையளி :</u>**

**1. தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன – உன் கருத்துகளை முன்வைக்கவும்.**

- தொல்லியல் ஆய்வுக்களங்களில் தோண்டி வெளிக்கொணரப்படும் பொருட்கள் அறிவியல் பூர்வமான ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- பண்டைய காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதனை இதன்மூலம் அறிய முடிகிறது.

**2. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்த அளவுக்கு முக்கியமான சான்றாக உள்ளன ?**

- சேர,சோழ,பாண்டிய அரசர்களின் நாணயங்கள்மற்றும் ரோமானிய நாணயங்கள் சங்க காலம் பற்றி அறிய உதவுகின்றன.
- பண்டைய கால வாணிகம், அரசர்கள், செலாவணி பற்றி அறிய உதவுகின்றன.

**3. சங்க காலத்தில் விவசாயம ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.**

- உயிர் வாழ்வதற்கான தேவைகளை நிறைவு செய்வதில் வேளாண்மை முதலிடத்தில் இருந்தது.
- நன்செய், புன்செய் நிலங்களில் நீர்பாசனம் மூலம் பயிர்த் தொழில் நடைபெற்றது..

**4. அயல் நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது– இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.**

- ரோமானியக் கப்பல்கள் தமிழகக் கடற்கரைக்கு வந்ததை ரோமானிய நாணயங்கள் மூலம் அறியலாம்.
- மிளகு, நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு தங்கம், வெள்ளி, செம்பு இறக்குமதி செய்யப்பட்டன.

## <u>விரிவான விடையளி :</u>

**1. தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்கு சங்க கால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின ?**

- சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்ளே பெரிய அரசியல் சக்திகளாக விளங்கினர்.
- பெருநகரங்களும், துறைமுகங்களும், வணிகமும், அவர்களின் கட்டுப்பாட்டிலே இருந்தது.

**<u>சேரர்கள்</u>**

- தற்கால கேரளம் மற்றும் தமிழகத்தின் மேற்கு பகுதிகளை ஆட்சி செய்தனர்.
- தலைநகரம் – வஞ்சி , துறைமுகம் – முசிறி, தொண்டி.

**<u>சோழர்கள்</u>**

- காவிரி வடிநிலப்பகுதி மற்றும் தமிழக வடபகுதி.
- துலைநகரம்–உறையூர், துறைமுகம் – காவிரிபூம்பட்டினம்.

**<u>பாண்டியர்கள்</u>**

- பாண்டியர்கள் தமிழக தென்பகுதி மற்றும் கடலோர தென்பகுதி.
- தலைநகரம் – மதுரை, துறைமுகம் – கொற்கை.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

**2. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின ?**

- ❖ கைவினைத் தயாரிப்புகளும் மிக நுண்ணிய வேலைப்பாடுடைய தொல்பொருளும் நகர வாழ்வின் முக்கியமான அடையாளங்கள்.
- ❖ இரும்பு உருக்கும் தொழில் வேளாண்மைக்கும் போர்களுக்கும் உதவின.
- ❖ தங்க ஆபரணங்கள், முத்துக் குளித்தல், கல்லில் செய்த அணிகலன்கள் வாணிகத்தை மேம்படுத்தியது.

## அலகு 4 அறிவு மளர்ச்சியும், சமூக–அரசியல் மாற்றங்களும்

**சுருக்கமான விடையளி :**

**1. ஹீனயானம் மற்றும் மகாயானம் பற்றி குறிப்பு வரைக**

**ஹீனயானம்** – புத்தரை குருவாக ஏற்றுவர்கள். உருவ வழிபாட்டை மறுத்தார்கள். பாலி மொழியை பயன்படுத்தினார்கள்.

**மஹாயானம்** – புத்தரை கடவுளாக வழிபட்டனர். புத்தர் சிலைகளை நிறுவி வழிபட்டனர். சமஸ்கிருத மொழியை பயன்படுத்தினார்கள்.

**2. மும்மணிகள் (திரி ரத்னா) – இச்சொல்லை விளக்கிக் கூறு.**

- ❖ மும்மணிகள் என்பது சமண மதத்தின் மூன்று கொள்கைகள்.
- ❖ அவை நன்னம்பிக்கை, நல்லறிவு மற்றும் நன்னடத்தை.

**3. அஜாதசத்ருவைப் பற்றிக் கூறு.**

- ❖ பிம்பிசாரரின் புதல்வர் – மகத மன்னர்
- ❖ இராணுவ வெற்றிகளின் மூலம் ஆட்சியை விரிவுபடுத்தினர்.
- ❖ பாடலிபுத்திரத்தை மற்றொரு தலைநகராக உருவாக்கினர்.

**4. கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன ?**

- ❖ அசோகர் கால கல்வெட்டுகளில் கலிங்க கல்வெட்டும் ஒன்று.
- ❖ போரில் வெற்றிக்காக நடந்த படுகொலையைப் பார்த்துத் தாம் மனவேதனை அடைந்ததைப் பதிவு செய்துள்ளார்.

**5. புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன ?**

- ❖ அசோகர் தனது மகன் மற்றும் மகளை இலங்கைக்கு அனுப்பி புத்தமதக் கொள்கைகளைப் பரவ செய்தார்.
- ❖ பாடலிபுத்திரத்தில் புத்த சமய மாநாடு நடத்தினார்.

**விரிவான விடையளி :**

**1. கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கிக் கூறு.**

**கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகள் :**

1. மனிதத் தன்மை 2. நேர்மை 3. நன்னடத்தை 4. மெய்யறிவு 5. நம்பகத்தன்மை



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- தனிநபரக்கு கட்டுப்பாடு அவசியம்
- மேன்மையான மனிதர் முன்மாதிரி நடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.
- ஆட்சியாளர்கள் பாரபட்சமின்றி ஆட்சி நடத்த வேண்டும்.
- நன்னடத்தை கொண்டோரைத்தான் அரசுப் பதவிகளில் அமர்த்த வேண்டும்.

**2. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை எழுதுக.**

**ஒற்றுமைகள்**

- விலங்குகள் பலியிடுவதை எதிர்த்தன.
- துறவி வாழ்க்கையை ஆதரித்தன.
- மூடநம்பிக்கைகளை எதிர்த்தன.

**வேற்றுமைகள்**

- புத்தமதக் கோட்பாடுகள் எளிமையாக இருந்தன. சமண மதக் கோட்பாடுகள் கடுமையாக இருந்தன.
- புத்தமதம் ஆன்மா என்றக் கருத்தை ஆதரிக்கவில்லை. சுமணமதம் ஆன்மா என்றக் கருத்தை ஆதரித்தது.

## 5. செவ்வியல் உலகம்

**சுருக்கமான விடையளி :**

**1. ரோமானிய அடிமை முறையைப் பற்றி எழுதுக.**

- ரோமில் போர்க் கைதிகள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர்.
- நிலப்பிரபுக்கள் அடிமைளைக் குறைந்த விலைக்கு வாங்கி தங்கள் நிலங்களில் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தினர்.

**2. கான்ஸ்டன்டைனின் முக்கிய பங்களிப்பை சுட்டிக் காட்டுக.**

- ரோமானிய பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவராக மதம் மாறிய பின்பு கிறிஸ்தவம் அரச மதமாகி வளர்ச்சி அடைந்தது.

**3. கார்த்தேஜ், ஹன்னிபால் குறித்து நீ அறிவது என்ன ?**

- பியூனிக் போர்களில் கார்த்தேஜ் அரசின் சார்பாக ஹன்னிபால் தளபதியாக நியமிக்கப்பட்டார்.
- ரோமானிய படையை தோற்கடித்து இத்தாலியின் பெரும் பகுதியை பாலைவனமாக்கினார்.

**4. ஹன் பேரரசின் செழிப்பிற்கான காரணங்கள் யாவை ?**

- ஹன் பேரரசு காலத்தில் பட்டு வணிகப்பாதை திறந்துவிடப்பட்டது.
- கைவினைப் பொருட்கள் – கால்நடை மேய்ச்சல் – பொருட்கள் அங்காடிகளுடன் செழிப்பாக இருந்தது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**5. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.**

- ❖ புனித சோபியா ஆலயம் கி.பி. 6 ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டது.
- ❖ இந்த ஆலயம் அக்கால ஐரோப்பாவின் மிக நேர்த்தியான நுணுக்க வேலைபாடுகளை கொண்டது.

## விரிவான விடையளி

**1. ஏதென்ஸின் எழுச்சி, வளர்ச்சி ஆகியவற்றையும் அதன் சிறப்புமிக்க கொடைகளையும் சுட்டி காட்டுக.**

**ஏதென்ஸின் எழுச்சி.**

- ❖ கிரேக்க நகர அரசுகளுள் குறிப்பிடத்தக்கது ஏதென்ஸ் ஆகும்.
- ❖ கணிதம் அறிவியல், தத்துவம் போன்ற துறைகளில் ஏதென்ஸ் மக்கள் சிறந்து விளங்கினர்.

**வளர்ச்சி**

- ❖ மக்களாட்சி முறை நிறுவப்பட்டது.
- ❖ ஏதென்சில் சட்டம் இயற்றும் அதிகாரம் அனைத்தும் மக்கள் மன்றத்தின் வசம் இருந்தது.

**சிறப்புமிக்க கொடைகள்**

- ❖ புதிய எழில்மிகு கட்டிடங்கள், கோட்டைகள், கோவில்களோ நகரங்கள் வளர்ச்சியடைந்தன.
- ❖ பெரிகிளிஸ் காலத்தில் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், போன்ற சிந்தனைவாதிகள் வாழ்ந்தனர்.

**2. செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.**

**ஆட்சி**

- ❖ செவ்வியல் காலத்தில் இந்தியாவில் குஷாணர்களின் ஆட்சி நடைபெற்றது.
- ❖ அகஸ்டஸ் சீசரின் அவைக்கு குஷாணர் தூதுக்குழு அனுப்பியதாக கூறப்படுகிறது.

**இலக்கியம்**

- ❖ செவ்விலுக்கு சமமான காலத்தில் சங்க இலக்கியமான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் தொகுக்கப்பட்டன.

**வணிகம்**

பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றோடு வாணிகம் நடைபெற்றது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

# 6. இடைக்காலம்

**சுருக்கமான விடையளி :**

**1. சீனப் பெருஞ்சுவர்**

- ❖ சீன அரசுகள் வடக்கே இருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள சுவர்களை எழுப்பின.
- ❖ சின் அரசவம்சத்தின் காலத்தில் சுவர்கள் இணைக்கப்பட்டன.
- ❖ இச்சுவரின் தற்போதைய நீளம் 6700 கி.மீ ஆகும்.

**2. சிலுவைப் போர்களின் தாக்கம்.**

- ❖ சிலுவைப் போர்கள் நிலப்பிரபுத்துவம் சார்ந்த உறவுகளுக்கு முடிவு கட்டியது.
- ❖ புதிய வணிக மையங்கள் தோன்றின.
- ❖ போப்பாண்டவரும் திருச்சபையும் செல்வாக்கை இழந்தன.

**3. இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன.**

- ❖ அரசன் நிலப்பிரபுத்துவத்தின் தலைவர்.
- ❖ அடுத்த நிலை டியூக்குகள் என்கிற பிரபுக்கள்.
- ❖ மூன்றாம் நிலை நிலத்தை தானமாகப் பெற்ற வைஸ் கவுண்ட்.
- ❖ நான்கு மற்றும் ஐந்தாம் நிலை – நைட் மற்றும் அடிமைகள்.

**4. இடைக்காலத்தில், சமயகுருமார்கள் தங்கள் அதிகாரத்தை வலியுறுத்தப் பயன்படுத்திய இரண்டு கருவிகள் யாவை ?**

- ❖ திருச்சபையிலிருந்து விலக்கி வைப்பது.
- ❖ மதவிலக்கு செய்வது.

**விரிவான விடையளி:**

**1. சோகுனேட்டுகளின் கீழ் ஜப்பானின் எழுச்சி பற்றி விரிவாகக் கூறுக.**

- ❖ சோகன் என்ற உண்மையான அரசனின் வழியில் சோகுனேட்டுகளின் ஆட்சி உருவானது.
- ❖ வாழ்வின் அனைத்து துறைகளிலும் ஜப்பான் சீனத்தை பின்பற்றியது.
- ❖ சாமுராய் என்ற வீரர்களைக் கொண்ட போர்ப்படை உருவாக்கப்பட்டது.
- ❖ மங்கோலியர்களை சோகுனேட்டுகள் வெற்றிக் கண்டனர்.
- ❖ சோகுனேட்டுகளின் ஆட்சி 235 ஆண்டுகள் நீடித்தது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**2. மங்கோலியர்கள் என்பவர் யார் ? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர் ?**

**மங்கோலியர்கள்**

- ❖ மங்கோலியர்கள் நாடோடிகள்,
- ❖ கால்நடை மேய்ப்பவர்கள்– போர்த்திறன் கொண்டவர்கள்.

**சீனாவில் ஆதிக்கம்**

- ❖ கி.பி 1252–1368 வரை ஆட்சி செய்தனர்.
- ❖ குப்ளேகானை ஆளுநராக பணியமர்த்தினர்.
- ❖ சீனாவின் தொழில்நுட்பத்தை மேற்கு பகுதியில் பரப்பினர்.

# 7. இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும்

## சுருக்கமான விடையளி:

**1. மாலிக்காபூரின் இராணுவப் படையெடுப்புகளைப் பற்றி எழுதுக.**

- ❖ அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவர் மாலிக்காபூர்.
- ❖ இவருடைய படையெடுப்பின் நோக்கம் ஆட்சியை விரிவுபடுத்துதல், செல்வங்களை கவர்தல் மற்றும் இந்து கோவில்களை அழித்தல்.

**2. விஜய நகர அரசை உருவாக்கியது யார் ? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

விஜய நகர அரசை உருவாக்கியது ஹரிஹரர், புக்கர்

வம்சாவளிகள்:

1. சங்கம் வம்சம் – இரண்டாம் தேவராயர்
2. சாளுவ வம்சம் – சாளுவ நரசிம்மர்
3. துளுவ வம்சம் – வீர நரசிம்மர்
4. ஆரவீடு வம்சம் – இரண்டாம் வெங்கடர்

**3. பருத்தி நெசவில் இந்தியர் பெற்றிருந்த இயற்கையான சாதகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- ❖ அடிப்படை மூலப் பொருளான பருத்தி இந்தியாவில் எளிதாகக் கிடைத்தது.
- ❖ இயற்கை சாயங்களை பயன்படுத்தும் முறையை அறிந்து இருந்தனர்.

**4. நகரமயமாதலுக்கு உதவிய காரணிகள் யாவை ?**

- ❖ வணிகத்தில் மேம்பாடு
- ❖ போக்குவரத்து சாலைகளின் இணைப்பு
- ❖ கிராம உட்பகுதிகளை சிறுநகரங்களுடன் இணைத்தல்
- ❖ புனிதத் தலங்களின் வளர்ச்சி

**5. பட்டு வளர்ப்பு என்றால் என்ன ?**

- ❖ பட்டுப்பூச்சிகளை வளர்த்து பட்டு உற்பத்தி செய்யும் முறை பட்டு வளர்ப்பாகும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**விரிவான விடையளி :**

**1. கி.பி 1526 முதல் 1707 வரையிலான அரசியல் மாற்றங்களை விவாதி**

- ❖ சோழர்கள் காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் செழிப்புமிக்க காலம். இவர்களது காலத்தில் வணிகம், பொருளாதாரம் விரிவடைந்து புதிய கோவில்கள் கட்டப்பட்டன.
- ❖ விஜய நகர பேரரசு நிறுவப்பட்டு தமிழகத்தின் நிர்வாகத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- ❖ டெல்லியில் இஸ்லாமியர்களின் ஆட்சி நிறுவப்பட்டது.
- ❖ மொகலாயப் பேரரசு வட இந்தியாவின் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மாற்றியமைத்தது.
- ❖ இறுதியாக ஐரோப்பியரின் வருகையானது இந்தியாவில் ஆங்கிலேயரின் காலனியாதிக்கம் உருவாவதில் முடிந்தது.

**2. இடைக்கால இந்தியாவில் ஏற்பட்ட வணிக வளர்ச்சியை விளக்குக.**

- ❖ பொருள் உற்பத்தியின் அடிப்படை அலகாக கிராமம் விளங்கியது.
- ❖ செலாவணி என்பது பண்ட மாற்றமாகவே இருந்தது.
- ❖ வணிக இடைத்தரகர்களும் இருந்தனர்.
- ❖ நகரங்கள் ஏனைய வணிக மையங்களோடு சாலை வழி இணைப்பாக இருந்தன.
- ❖ நாட்டின் முக்கிய துறைமுகங்கள் பன்னாட்டு வணிக மையங்களாக விளங்கின.

**3. தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னத காலம் விளக்கவும்.**

- ❖ அரசின் நிர்வாகம் மாற்றியமைக்கப்படடது.
- ❖ உள்ளாட்சி நிர்வாகம் கிராமம்–நாடு–கோட்டம் என வகைப்படுத்தப்பட்டது.
- ❖ உள்ளாட்சி மன்றங்கள் மக்களின் உள்ளூர் தேவைகளை நிறைவேற்றியது.
- ❖ சோழர் காலத்தில் வணிகமும் பொருளாதாரமும் விரிவடைந்தது.
- ❖ புதிய பரிமாணங்களுடன் புதிய கோவில்கள் கட்டப்பட்டன.

## 8. நவீன (கால) யுகத்தின் தொடக்கம்

**சுருக்கமான விடையளி :**

**1. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் மற்றும் புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விவரி.**

- ❖ அச்சு இயந்திரம் அறிவை பரந்து விரிவாக்கியது.
- ❖ மத சீர்திருத்தக் கருத்துகளை பிரசுரங்களாகவும், புத்தகங்களாகவும் பரப்பியது.
- ❖ பயணக் குறிப்புகள், புவியியல் தொடர்பான நூல்கள் கடல்வழிப் பற்றிய அறிவை அதிகரித்தது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**2. மறுமலர்ச்சியின் விளைவுகள் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- ❖ மனித நேயத்தை வளர்த்தது
- ❖ வட்டார மொழிகளின் வளர்ச்சி.
- ❖ புதிய நில மற்றும் கடல்வழிப் பாதைகளின் கண்டுபிடிப்பு.

**3. கத்தோலிக்க திருச்சபை மீது மார்டின் லூதர் கொண்டிருந்த மாற்றுக் கருத்துகளை விவரி**

- ❖ திருச்சபை சடங்குகள், பாவ மன்னிப்பு நடைமுறைகளை நிராகரித்தார்.
- ❖ திருச்சபை கடவுளுக்கும் தனி நபருக்கும் இணைப்புப் பாலம் என்பதை நிராகரித்தார்.

**4. மத எதிர் சீர்திருத்தம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- ❖ போப் மூன்றாம் பால் திருச்சபை ஊழல்களை தடுத்து பதவிகளின் விற்பனையை தடை செய்தார்.
- ❖ இயேசு சபைக்கு அதிகாரபூர்வமான அனுமதி அளிக்கப்பட்டது.

**5. கொலம்பியப் பரிமாற்றம் என்றால் என்ன ?**

அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவிற்குமிடையே தாவரங்கள், விலங்குகள், தொழில்நுட்ப பண்பாடு மற்றும் விநோதமான நோய்கள் இடப்பெயர்வுக்கு கொலம்பியப் பரிமாற்றம் என்று பெயர்.

## <u>விரிவான விடையளி :</u>

**1. மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் மற்றும் புவியியல் சார் கண்டுபிடிப்புகள் எவ்வாறு நவீன யுகத்தின் வருகையைப் பறை சாற்றின–விவாதி.**

<u>மறுமலர்ச்சி</u>

- ❖ செல்வ செழிப்புமிக்க, வணிகமயமான நகர பண்பாட்டின் எழுச்சிக்கு வித்திட்டது.
- ❖ மனித நேயம் என்ற சிந்தனையை அறிமுகம் செய்தது.

<u>மத சீர்திருத்தம்</u>

- ❖ மறுமலர்ச்சி திருச்சபையின் நடைமுறைகளை கேள்வி கேட்பதற்கு உதவின.
- ❖ கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தங்களை கொண்டு வந்தது.

<u>புவியியல் சார் கண்டுபிடுப்புகள்</u>

- ❖ ஐரோப்பாவை வணிக மையங்களாக மாற்றின.
- ❖ ஆசியா, ஐரோப்பாவிடையே பொருட்கள் மற்றும் பண்பாடு பரிமாற்றம் நிகழ்ந்தன.
- ❖ ஆசியா, ஆப்ரிக்கா நாடுகள் ஐரோப்பாவின் குடியேற்ற நாடுகளாக மாறின.

**2. புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் பற்றி விவரி.**

- ❖ ஐரோப்பா பொருளாதார மையமாக மாற்றியது.

www.padasalai.Net

- போர்ச்சுக்கல் – ஸ்பெயின் நாடுகளின் குடியேற்றங்களால் அந்நாடுகள் செழுமை அடைந்தன.
- அடிமை முறை பரவலாயிற்று.
- தொற்று நோய்கள் பரவி பலர் இறந்தனர்.
- தானிய – பழவகைகள் பல நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நவீன முதலாளித்துவ பொருளாதாரத்தைக் கொண்டு வந்தது.

## 9. புரட்சிகளின் காலம்

### சுருக்கமான விடையளி :

**1. பியூட்டானியர் என்போர் யார் ? அவர்கள் இங்கிலாந்தை விட்டு ஏன் வெளியேறினர் ?**

- இங்கிலாந்து திருச்சபையை சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கில் இருந்த மதசீர்திருத்தவாதிகளே பியூரிட்டானியர்.
- ரோம் கத்தோலிக்க திருச்சபை நடைமுறைளை ஏற்க மறுத்து இங்கிலாந்தை விட்டு வெளியேறினர்.

**2. குவேக்கர் பற்றி நீவிர் அறிவதென்ன ?**

- புனித ஆவிக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள்.
- போருக்கு எதிராகவும் அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்காக நற்பெயர் பெற்றவர்கள்.

**3. பாஸ்டன் தேநீர் விருந்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

- இங்கிலாந்திற்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள குடியேற்ற நாடுகளுக்குமிடையே போர் ஏற்படுவதற்கு வழிகோலியது.

**4. செப்டம்பர் படுகொலை பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- பிரெஞ்சு புரட்சியின் விளைவாக அரசரின் ஆதவாளர்களை மாரட் என்பவர் தம் குழுக்களுடன் வேட்டையாடினார்.
- செப்டம்பர் 2–ல் தொடங்கி மூன்று நாட்களில் 1500 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்து கொல்லப்பட்டனா.

**5. பிரான்ஸின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு பற்றி எழுதுக**

- பிரபுக்கள் மன்றம்
- மதகுருமார்கள் மன்றம்
- பொது மக்கள் மன்றம்

**6. பிரெஞ்சு புரட்சியில் லஃபாய்டின் பங்கினை எழுதுக.**

- தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோரின் உதவியோடு மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை எழுதினர்.
- உலகம் முழுவதற்கும் அனைத்து காலத்திற்கும் பொருந்தக்கூடிய மனித உரிமைகள் பற்றிய நூலாகும்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

**7. பாஸ்டில் சிறைச்சாலை தகர்ப்பிற்கான பின்னனி என்ன ?**

- ❖ பிரெஞ்சு மக்கள் அரசருக்கு எதிராக டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடி கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- ❖ கிளர்ச்சியை அடக்க மன்னர் அடக்குமுறையை கையாள முற்படும்போது எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக மக்கள் பாஸ்டில் சிறைச்சாலையை தகர்த்து கைதிகளை வெளியேற்றினர்.

**8. பிரெஞ்சு புரட்சியின்போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் என்ன ?**

1. நிலவரி  2. உப்புவரி  3. தசமபாக வரி  4. இலவச உழைப்பு

## விரிவான விடையளி :

**1. "பிரதிநித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை" இக்கூற்று அமெரிக்க சுதந்திரப்போருக்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை விளக்குக.**

- ❖ 1764 ம் ஆண்டு சர்க்கரைச் சட்டம் குடியேற்ற நாடுகள் வெளிநாடுகளில் இருந்து மதுபான இறக்குமதியை தடை செய்தது.
- ❖ ஆடம்பர பொருட்கள் மீது கடுமையான வரி விதிக்கப்பட்டது.
- ❖ செலாவணிச் சட்டம் இங்கிலாந்திடமிருந்து அமெரிக்கா பட்ட கடனை தங்கம், வெள்ளியாக கொடுக்க கட்டாயப்படுத்தப்பட்டது.
- ❖ 1765 படைவீரர் தங்குமிடம் சட்டம் அமெரிக்காவில் தங்கும் இங்கிலாந்து படைவீரர்களுக்கு சம்பளம் கொடுக்க கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- ❖ மேற்கண்ட அனைத்து சட்டங்களும் "பிரதிநித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை" என்ற முழக்கத்தை உருவாக்கி அமெரிக்கா சுதந்திரப் போருக்கு வழிவகுத்தது.

**2. 1789 ஆம் ஆண்டுப் புரட்சிக்கு பிரெஞ்சுத் தத்துவ ஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்.**

**வால்டேர் :**

- ❖ பகுத்தறிவு மற்றும் அறிவியல் பற்றி எழுதிய சிந்தனையாளர்.
- ❖ தனது எழுத்துகளில் பிரான்சின் மோசமான நிலையை கொண்டு வந்தார்.
- ❖ திருச்சபையை கடுமையாக எதிர்த்தவர்.

**ரூசோ :**

- ❖ சாமானிய மக்களை புரட்சிக்கு தயார் செய்ததில் இவரின் பங்கு மகத்தானது.
- ❖ ரூசோவின் "சமூக ஒப்பந்தம்" என்ற நூலில் "மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான். ஆனால் எங்கும் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான்" என்ற வாக்கியம் மக்களை விழிப்படையச் செய்தது.

**மாண்டெஸ்க்யூ :**

- ❖ அதிகாரப் பிரிவினை எனும் கோட்பாட்டை முன்வைத்தவர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- சட்டத்தின் சாரம் எனும் நூலில் மக்களின் சுதந்திரத்திற்கு ஆதரவாக எழுதினார்.

# 10. தொழிற்புரட்சி

**சுருக்கமான விடையளி :**

**1. தொழிற்புரட்சியின் போது இங்கிலாந்தில் தொழிலாளர்களின் வாழ்விடங்களின் நிலை எவ்வாறு இருந்தன ?**

- தொழிலாளர்கள் மிகவும் சிறிய அழுக்கடைந்த, சுகாதாரமற்ற வீடுகளில் வாழ்ந்தனர்.
- அவர்களின் வாழ்விடங்களில் தொற்றுநோய்கள் பரவி இருந்தன.

**2. இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைக் கூறு.**

- இங்கிலாந்தின் வேளாண் உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.
- மான்செஸ்டர் நகரின் குளிர்ந்த தட்பவெப்ப நிலை ஜவுளி உற்பத்திக்கு ஏதுவாக இருந்தது.
- உலகின் தொழிற்பட்டறையாக இங்கிலாந்து மாறியது.

**3. ஹே மார்க்கெட் படுகொலை பற்றி குறிப்பு வரைக**

- **நாளொன்றுக்கு எட்டுமணி நேர** வேலை கோரிக்கை வலியுறுத்தி அமெரிக்காவின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் 1886–மே–4ம் தேதி தொழிலாளர் ஆர்பாட்டம் நடந்தது.
- இந்த ஆர்பாட்டத்தில் ஆங்கில அரசு துப்பாக்கி சூடு நடத்தி பலரைக் கொன்றது. இதுவே ஹே மார்க்கெட் படுகொலை ஆகும்.

**4. லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்ன ?**

- பிரான்சில் நான்கு சக்கர வாகனத்தை உற்பத்தி செய்த பெருமை லூயி ரெனால்ட் அவர்களையே சாரும்.
- இவரைத் தொடர்ந்து இவரது சகோதரர்கள் தங்களது நிறுவனத்தின் மூலம் அதிக நான்கு சக்கர வாகனங்களை தயாரித்தனர்

**5. தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுக.**

- வணிக விரிவாக்கம் வளர்ந்தது.
- மக்கள் தொகை பெருகியது.
- வேலை வாய்ப்புகள் அதிகரித்தது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**விரிவான விடையளி :**

**1. அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி நடைபெற்றதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.**

- அமெரிக்காவில் உழைப்பாளர்களின் தொழில்நுட்பமானது இயந்திரம் சார்ந்த உற்பத்திக்கு மாறியது.
- உள்நாட்டு போருக்குப்பின் தொழில்மயமாதல் தீவிரமடைந்தது.
- 1869–ல் கண்டங்களை இணைக்கும் ரயில்பாதை அமைக்கப்பட்டது.
- நீராவிப் படகுப் போக்குவரத்து வணிகத்திற்கு பெரிதும் உதவியது.
- தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கு–அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் தொலைபேசி கண்டுபிடிப்புகள் அமெரிக்காவை நவீனமயமாக்க பெரிதும் உதவின.

**2. இங்கிலாந்தின் தொழிற்புரட்சியால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?**

- இங்கிலாந்து தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் களமாக இந்தியா மாறியது.
- இந்திய கைத்தறி ஆடைகள் சந்தை மதிப்பை இழந்தன.
- இங்கிலாந்தின் உற்பத்திப் பொருட்களை விற்கும் சந்தையாக இந்தியா மாற்றப்பட்டது.
- வேலையில்லா திண்டாட்டம் பெருகியது.
- உணவு உற்பத்தி குறைந்தது.

# 11. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்

**சுருக்கமான விடையளி:**

**காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக.**

| காலனியாதிக்கம் | ஏகாதிபத்தியம் |
|---|---|
| காலனியாதிக்கம் என்பது அந்நிய நாடுளில் குடியேற்றங்களை ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களை சுரண்டுதல். | ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு பிற நாடுகளை வென்று தன் ஆட்சியின் கீழ் கொண்டு வருதல். |

**2. ஜீலு பூர்வ குடிகள் பற்றி குறிப்பு வரைக.**

- தென்கிழக்கு ஆப்பிரிக்காவின் போர்த்திறன் மிக்க பூர்வகுடி மக்களே ஜீலு.
- ஜீலு மக்களுக்கென ஒரு பெரிய நாட்டை உருவாக்குவதில் புகழ்பெற்ற போராளி சாக்கா ஜீலு.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. இந்தியப் பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக.**

- முதல் கட்டம் – வணிக முதலாளித்துவம்
- இரண்டாம் கட்டம் – தொழில்முறை முதலாளித்துவம்
- மூன்றாம் கட்டம் – நிதி மூலதன முதலாளித்துவம்

**4. கர்னல் பென்னிகுயிக்**

- இராணுவப் பொறியாளர் – குடியுரிமைப் பணியாளர்–சென்னை மாகாண சட்டமன்ற மேலவை உறுப்பினர்.
- முல்லை பெரியாறு அணை கட்டும்போது ஆங்கில அரசிடமிருந்து போதிய நிதி கிடைக்காமல் போகவே இங்கிலாந்தில் உள்ள தனது குடும்ப சொத்துகளை விற்று அணையைக் கட்டி முடித்தவர்.

**5. தாயகக் ட்டணங்கள் பற்றி விளக்கவும்.**

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் நடத்திய போர்களுக்கான செலவு.
- கம்பெனி பங்குதாரர்களுக்கு கொடுக்க வேண்டிய இலாபம்.
- வாங்கிய கடன்களின் மீதான வட்டி
- ஆங்கில அதிகாரிகளின் ஒய்வூதியம்.
- இலண்டனில் உள்ள இந்திய அலுவலக செலவு போன்றவற்றிற்கு தாயகக் கட்டணம் என்ற பெயரில் இந்தியர்களிடம் வரிவசூல் செய்தனர்.

/

**1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.**

- இந்தியாவில் முதன்முறையாக ஜமீன்தாரர்கள் என்ற பெயரில் நிலப்பிரபுக்கள் வர்க்கம் உருவாக்கப்பட்டது.
- நிரந்தர நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ரயத்துவாரி முறை அறிமுகம்– இதன்மூலம் விவசாயி நிலத்தின் உரிமையாளர் ஆவார்.
- நிலத்தில் தனிச்சொத்துரிமை என்ற கோட்பாடு உருவாகியது.
- வேளாண்மை கடன்கள் அரசு மற்றும் தனியார் அமைப்புகள் வழங்கியது.
- நீர்ப்பாசனத் திட்டங்கள் வேளாண்மையை சார்ந்து இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- வறட்சியிலும் விவசாயிகளிடம் நிலவரி போன்ற பல வரிகள் வசூலிக்கப்பட்டதால் அவர்கள் நலிவுற்றனர்

**2. ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் ஏற்பட்டதை விவரி**

- 1881 முதல் 1914–க்கு இடையே தான் ஐரோப்பிய சக்திகள் ஆப்பிரிக்காவின் மீது குடியேற்றங்களை ஏற்படுத்தியது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**இங்கிலாந்து**

- ❖ தென் ஆப்பிரிக்க கேப் காலனி–ஜோகன்ஸ்பர்க், ரொடீசியா, கென்யா–உகாண்டா ஜான்ஜிபார் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது.

**டச்சுக்காரர்கள்**

- ❖ தென் ஆப்பிரிக்க பகுதிகளில் டிரான்ஸ்வாலா–ஆரஞ்சு நாட்டை கைப்பற்றியது.

பிரெஞ்சு

- ❖ மேற்கு ஆப்பிரிக்கா செகைல்–கினியா–ஐவரிகோஸ்ட் சகாரா பாலைவன தெற்கு பகுதிகளை இணைத்துக் கொண்டது.

**பெல்ஜியம்**

- ❖ காங்கோ பகுதிகளை கைப்பற்றியது.

# புவியியல்

## அலகு–1 : பாறைக்கோளம் –1 புவி அகச்செயல் முறைகள்

**காரணம் கூறுக.**

1. **தீப்பாறைகளை முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.**

   மற்றப் பாறைகள் தீப்பாறைகளிலிருந்து உருவாவதால் முதன்மைப் பாறைகள் என்று அழைக்கப்படுகின்றன.

**வேறுபடுத்துக .**

| 1. கருவம் | மேலோடு |
|---|---|
| மைய அடுக்கு<br>நிக்கலும் இரும்பும் அதிகமாக காணப்படும்.<br>நைஃப் எனப்படுகிறது. | புவியின் மேலடுக்கு<br>சிலிகா மற்றும் அலுமினியம் அதிகமாக காணப்படும்.<br>சியால் எனப்படுகிறது. |
| **2. மேல் மையம்** | **கீழ் மையம்** |
| கீழ் மையத்தின் நேர் உயரே புவியின் மேற்பரப்பில் உள்ள மையம் மேல்மையம்.<br>புவி அதிர்ச்சியின் தாக்கம் அதிகம். | புவிக்குள் புவி அதிர்வு உருவாகும் புள்ளி புவி அதிர்ச்சி கீழ் மையம் எனப்படும்.<br>துணை அலைகள் எல்லா திசைகளிலும் பரவும். |
| **3. விலகும் எல்லை** | **இணையும் எல்லை** |
| புவித்தட்டுகள் ஒன்றை விட்டு ஒன்று | புவித்தட்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் |



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| விலகும் பகுதி. பாறைக்குழம்பு வெளியேறுதல் நடைபெறுகிறது. | பகுதி. கீழ் நோக்கி சொருகுதல் நிகழ்வு நடைபெறுகிறது. |
| **4. முதன்மை அலைகள்** | **இரண்டாம் நிலை அலைகள்** |
| மற்ற அலைகளை விட மிகவும் வேகமாக பயணிக்கக் கூடியவை. திட,திரவ,வாயு பொருட்கள் வழியாக பயணிக்கும். | முதன்மை அலைகளை விட வேகம் குறைவு. திடப் பொருள் வழியாக மட்டும் பயணிக்கும். |
| **5. கவச எரிமலை** | **கும்மட்ட எரிமலை** |
| பாறைக் குழம்பு அனைத்து திசைகளிலும் வழிந்தோடி கேடயம் போன்று இருக்கும். (எ.கா) மௌனலோவா எரிமலை–ஹவாய் தீவு | நீண்ட தூரம் பரவ முடியாமல் எரிமலை வாய்க்கு அருகில் வட்ட வடிவில் பாறைக் குழம்பு படியும். (எ.கா) பாரிக்கியூட்டின் எரிமலை–மெக்சிக்கோ |

**<u>சுருக்கமான விடையளி :</u>**

**1. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

பாறைக்கோளம் – புவியின் திடமான மேற்பரப்பு
நீர்க்கோளம் – புவியின் மேற்பரப்பிலுள்ள நீர்ப்பகுதி
வாயுக்கோளம் – புவியைச் சூழ்ந்துள்ள வாயுப்பகுதி
உயிர்க்கோளம் – உயிரினங்கள் வாழும் பகுதி.

**2. புவியின் உள் அடுக்குகள் யாவை ?**

புவியின் உள் அடுக்குகள் மேலோடு, கவசம், கருவம் ஆகும்.

**3. புவித்தட்டுகள்– வரையறு.**

- ❖ பாறைக்கோளம்பல புவித்தட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- ❖ முதன்மை புவித்தட்டுகள், சிறிய புவித்தட்டுகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன.
- ❖ இப்புவுத்தட்டுகள் கவசத்தின் மீது மிதந்து கொண்டிருக்கின்றன.

**4. ஆழிப் பேரலைகள்என்றால் என்ன ?**

கடலடியில் தோன்றும் புவி அதிர்ச்சி, எரிமலைச் செயல்பாடு மற்றும் கடலோரப் பகுதிகளில் நடைபெறும் மிகப்பெரிய நிலச்சரிவுகள் ஆகியவற்றால் கடலில் தோன்றும் பெரிய அலைகள் ஆழிப்பேரலைகள் எனப்படும்.

**5. எரிமலைகள் என்றால் என்ன ? அவற்றின் கூறுகள் யாவை ?**

புவியின் உட்புறத்தில் திட,திரவ,வாயு நிலையில் உள்ள பாறைக்குழம்பு துவாரம் வழியாக புவியின் மேற்பரப்பில் உமிழ்தல் எரிமலை வெடிப்பு எனப்படும்.

**<u>கூறுகள்:</u>**

1. பாறைக் குழம்புத் தேக்கம்
2. துவாரங்கள்
3. எரிமலைக் கூம்புகள்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

4. எரிமலை வாய்

**6. புவி அதிர்ச்சி என்றால் என்ன ? அவை எவ்வாறு உருவாகின்றன ?**

- ❖ புவி அதிர்ச்சி என்பது புவி ஓட்டில் திடீரென ஏற்படும் அதிர்வைக் குறிக்கின்றது.
- ❖ புவி அதிர்வு உருவாகும் கீழ் மையத்திலிருந்து அதிர்வலைகள் எல்லா திசைகளிலும் பரவிச் செல்கின்றன

**7. புவி அதிர்வலைகள் என்றால் என்ன ? அவற்றின் வகைகள் யாவை ?**

புவி அதிர்வுகளால் உருவாகும் அலைகள்புவி அதிர்வலைகள் எனப்படும்.

அவற்றின் வகைகள்:

1. முதன்மை அலைகள் 2. இரண்டாம் அலைகள் 3. மேற்பரப்பு அலைகள்

**8. பசுபிக் நெருப்பு வளையம் பற்றி எழுதுக.**

பசுபிக் பெருங்கடல் பகுதியில் பசுபிக் தட்டுடன் மற்ற கண்டத்தட்டுகள் இணையும் எல்லைகளில் எரிமலை வெடிப்பு அதிகமாக நிகழ்வதால் இப்பகுதி பசுபிக் நெருப்பு வளையம் என அழைக்கப்படுகிறது.

## பத்தியளவில் விடையளி :

**1. புவி அமைப்பை விவரி**

புவியின் அமைப்பானது மேலோடு, கவசம், கருவம் என மூன்று பிரிவுகளாக உள்ளது.

**மேலோடு**

- ❖ புவியின் உயிரினங்கள் வாழும் மேற்பகுதி மேலோடு.
- ❖ 5 முதல் 30 கி.மீ வரை பரவியுள்ளது.
- ❖ இதில் சிலிகா, அலுமினியம் காணப்படுவதால் சியால் எனப்படுகிறது.

**கவசம்**

- ❖ புவி மேலோட்டிற்கு கீழேயுள்ள பகுதி கவசம் எனப்படும்.
- ❖ 2900 கி.மீ வரை பரவியுள்ளது.
- ❖ மேற்பகுதி திடமாக, கீழ்பகுதி உருகிய நிலையில் உள்ளது.
- ❖ இதில் சிலிகா, மெக்னீசியம் காணப்படுவதால் சிமா எனப்படுகிறது.

**கருவம்**

- ❖ புவியின் மையத்தில் உள்ள அடுக்கு கருவம்.
- ❖ மிகவும் வெப்பமானது.
- ❖ உட்பகுதி திரவமாகவும் வெளிக்கருவம் திரவ நிலையிலும் இருக்கும்.
- ❖ இதில் நிக்கல், இரும்பு காணப்படுவதால் நைஃப் எனப்படுகிறது.

**2. புவியின் அகச்செயல் முறைகள் மற்றும் புறச்செயல் முறைகள் குறித்து எழுதுக.**

**அகச்செயல் முறைகள்:**

- ❖ புவியின் உட்பகுதியிலிருந்து புவியின் மேற்பரப்பை நோக்கிச் செயல்படும் விசைகள் அகச்செயல்முறைகள் எனப்படும்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- இந்த செயல்பாட்டில் புவியின் உள்ளே உள்ள கதிர்வீச்சு முக்கியப் பங்காற்றுகிறது.

  (எ.கா) புவித்தட்டுகள்அசைவு, எரிமலைகள், புவி அதிர்வுகள்.

**புறச்செயல் முறைகள்:**

- புவிப்புறச் செயல்முறைகள் புவியின் மேல் உள்ள பொருட்களின் மீது அழுத்தத்தையும், மறு உருவாக்கியத்தையும் ஏற்படுத்தி அவற்றின் மீது மாற்றத்தை உண்டாக்குகிறது.

  (எ.கா) ஆறுகள், பனியாறுகள், காற்று, அலைகள் போன்ற விசைகள் புவியின் மேற்பரப்பில் காணப்படும் இயற்கை காரணிகள்.

**3. எரிமலைகள் வெடிக்கும் காலக்கட்டத்தைப் பொறுத்து அதன் வகைகளை விவரி.**

எரிமலைகள் செயல்படும் காலத்தைப் பொறுத்து மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. செயல்படும் எரிமலை
2. உறங்கும் எரிமலை
3. தணிந்த எரிமலை

**1. செயல்படும் எரிமலை :**

நிரந்தரமாக தொடர்ந்து எரிமலைக் குழம்புகளையும், துகள்களையும், வாயுக்களையும் வெளியேற்றிக் கொண்டே இருக்கும் எரிமலைகள் செயல்படும் எரிமலைகள் எனப்படுகின்றன.

(எ.கா) செயிண்ட் ஹெலன்ஸ் எரிமலை

**2. உறங்கும் எரிமலை :**

நீண்ட காலமாக செயல்பாடுகள் ஏதும் இல்லாமல் காணப்படும் எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் எனப்படும்.

(எ.கா) ஃபியூஜி எரிமலை ஜப்பான்

**3. தணிந்த எரிமலை :**

எந்த வித எரிமலைச் செயல்பாடுகளுமின்றி காணப்படும் எரிமலைகள் தணிந்த எரிமலைகள் எனப்படும்.

(எ.கா) கிளிமஞ்சாரோ எரிமலை–தான்சானியா

**4. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை ?**

**நன்மைகள் :**

- மண்ணை வளமாக்கி வேளாண்மையை மேம்படுத்துகிறது.
- உலகின் சிறந்த சுற்றுலாத் தளங்களாக உள்ளன.
- எரிமலையிலிருந்து வெளிப்படும் பொருட்கள் கட்டிடத் தொழிலுக்கு பயன்படுகிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**தீமைகள் :**

- புவி அதிர்ச்சி, தீடீர் வெள்ளம், சேறு வழிதல் மற்றும் பாறை சரிதல் ஏற்படுகின்றன.
- அதிக அளவில் வெளிப்படும் தூசு மற்றும் சாம்பல் எரிச்சலையும் மூச்சு விடுவதில் சிரமத்தையும் உண்டாக்குகிறது.
- வானிலை மாற்றத்தை ஏற்படுத்துகிறது

## அலகு – 2 பாறைக்கோளம்–2 புவி புறச்செயல்முறைகள்

**காரணம் கூறுக.**

**1. வெப்பம் மற்றும் ஈரப்பதம் நிறைந்த மண்டலங்களில் இராசாயன சிதைவு அதிகமாக ஏற்படுகிறது.**

இராசயான நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுவதால் இராசயான சிதைவு அதிகமாக ஏற்படுகிறது.

**2 ஓதப்பொங்கு முகங்களில் மென்மையான வண்டல் படிவுகள் குறைவாக படியவைக்கப்படுகிறது.**

அலைகளின் அரித்தல் காரணமாக வண்டல் படிவுகள் குறைவாக படியவைக்கப்படுகிறது.

**3. பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு.**

காற்று கிடைமட்டமாக அனைத்து திசைகளிலும் நகர்வதால் அனைத்து பகுதிகளிலும் அரிக்கும் தன்மை உண்டு.

**வேறுபடுத்துக :**

| **1. இயற்பியல் சிதைவு** | **இரசாயனச் சிதைவு** |
|---|---|
| 1. இயற்பியல் சக்திகளால் உடைபடுவதே இயற்பியல் சிதைவு.<br><br>2. அதிக வெப்பம், அதிக குளிரின் காரணமாக பாறைகளில் விரிசல் ஏற்பட்டு உடைகின்றன. | 1. பாறைகளில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு உடைபடுவதே இரசாயன சிதைவு.<br><br>2. வேதியியல் செயல்பாடுகளின் காரணமாக பாறைகளில் விரிசல் ஏற்பட்டு உடைகின்றன. |
| **2. டெல்டா** | **ஓதப்பொங்கு முகம்** |
| 1. ஆற்றின் முகத்து வாரத்தில் உருவாகிறது.<br>2. முக்கோண வடிவில் படிய வைத்தல் நடைபெறுகிறது.<br>(எ.கா.) காவிரி டெல்டா | 1. ஆறு கடலில் சேருமிடங்களில் உருவாகிறது.<br>2. இவ்வகை நிலத்தோற்றத்தில் படிய வைத்தல் நடைபெறுகிறது.<br>(எ.கா) நர்மதை மற்றும் தபதி |



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| **3. கல் விழுது** | **கல் முளை** |
| குகைகளின் கூரையிலிருந்து ஒழுகும் கால்சியம் கார்பனேட் ஆவியாகும் போது கால்சைட் விழுதுகள் தோன்றுகிறது. | கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து மேல்நோக்கி வளர்வது கல்முளை எனப்படும். |
| **4. நீண்ட மணற் குன்று** | **குறுகிய மணற் குன்று** |
| 1. இவை மணற்தொடர்களாக நீண்டு காணப்படும்.<br>2. காற்று வீசும் திசைக்கு இணையாக காணப்படும். | 1. இவை சமச்சீரற்ற வடிவத்தில் காணப்படும்.<br>2. காற்று வேகமாகவும் மிதமாகவும் மாறி மாறி ஒரே திசையில் வீசும் போது இவை உருவாகின்றன. |
| **5. இன்சல்பர்க்** | **யார்டங்** |
| 1. இது வறண்ட பிரதேசங்களில் காணப்படும் தீப்பாறைகள்.<br>2. காற்றின் அரிப்புக்கு உட்படாமல் தனித்து உயர்ந்து காணப்படும். | 1. இது வறண்ட பிரதேசங்களில் காணப்படும் கடின பாறைகள்.<br>2. காற்றின் அரிப்புக்கு உட்படாமல் ஒழுங்கற்ற முகடுகள்போன்று காணப்படும். |
| | |
| | |
| **6. நீண்ட மணல்திட்டு** | **மணல்திட்டு** |
| 1. மணல் திட்டின் ஒரு முனை நிலத்தோடு இணைந்தும் மறுமுனை கடலை நோக்கி நீண்டும் காணப்படும்.<br>2. ஓத பொங்கு முகங்களில் காணப்படும். | 1. கடற்கரையில் மணற்படிவுகளால் ஆன நீண்ட நிலத்தோற்றம் ஆகும்.<br>2. கடற்கரைக்கு இணையாக காணப்படும். |

## சுருக்கமான விடையளி :

**1. வானிலைச் சிதைவு–வரையறு.**

வளிமண்டல நிகழ்வுகளோடு புவியின் மேற்பரப்பு நேரடியாகத் தொடர்பு கொள்வதால் பாறைகள் சிதைவடைதலை வானிலைச் சிதைவு என்கிறோம்.

**2. உயிரினச் சிதைவு –வரையறு.**

தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் பாறைகள் சிதைவுறுதலே உயிரினச் சிதைவு எனப்படும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. ஆற்றின் மூன்று நிலைகள் யாது ? அதனோடு தொடர்புடைய இரண்டு நிலத்தோற்றங்களைக் கூறுக.**

1. இளநிலை – V வடிவ பள்ளத்தாக்குகள், குறுகிய பள்ளத் தாக்குகள்.
2. முதிர்நிலை – வண்டல் விசிறிகள் வெள்ளச் சமவெளிகள்.
3. மூப்பு நிலை – டெல்டாக்கள், ஓதப் பொங்கு முகங்கள்.

**4. குருட்டு ஆறு என்றால் என்ன ?**

ஆற்று வளைவுகள் காலப்போக்கில் முழு வளையமாக மாறி முதன்மை ஆற்றிலிருந்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு ஒரு ஏரியைப் போன்று காட்சி அளிக்கும். இதுவே குருட்டு ஆறு எனப்படும்.

**5. கடற்குகை எவ்வாறு கடல் வளைவிலிருந்து வேறுபடுகிறது ?**

கடற்குகைகள் மேலும் அரிக்கப்படுவதால் அவை இணைந்து கடல் வளைவுகள் உருவாகின்றன.

**6. இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு சுண்ணாம்புப் பாறை பிரதேசங்களை பட்டியலிடுக.**

1. மேற்கு பீஹார் – குப்ததாம் குகைகள்
2. உத்தரகாண்ட் – ராபர்ட் குகைகள்
3. மத்தியபிரதேசம் – பாண்டவர் குகைகள்
4. ஆந்திரபிரதேசம் – போரா குகை

**7. தொங்கும் பள்ளத்தாக்கு என்றால் என்ன ?**

முதன்மை ஆற்றினால் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக்கின் மீது அமைந்திருக்கும் துணைப் பனியாற்றின் பள்ளத்தாக்கு தொங்கும் பள்ளத்தாக்கு ஆகும்.

**8. வரையறு: அ. மொரைன் ஆ. டிரம்ளின் இ. எஸ்கர்**

**அ. மொரைன் :**

பள்ளத்தாக்கு அல்லது கண்டப் பனியாறுகளால் படிய வைக்கப்பட்டு உருவாக்கப்படும நிலத் தோற்றங்கள் மொரைன்கள் எனப்படும.

**ஆ. டிரம்ளின் :**

கவிழ்த்து வைக்கப்பட்ட மிகப்பெரிய கரண்டியைப் போன்று உள்ள மொரைன்கள் டிரம்ளின்கள் எனப்படும்.

**இ. எஸ்கர் :**

பனியாறுகளால் கொண்டு வரப்படும் கூழாங்கற்கள், சரளைக் கற்கள், மற்றும் மணல் ஒரு நீண்ட குறுகிய தொடர் குன்றுகளாக படிய வைக்கப்படுகின்றன.

**9. காற்றின் அரித்தல் செய்கையால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்களை பட்டியலிடுக.**

காளான் பாறை, இன்சல்பர்க், மற்றும் யார்டங்.

**10. கடல் அலை அரிமேடை என்றால் என்ன ?**

ஓங்கல்களின் மீது அலைகள் மோதுவதால் சற்று உயரத்தில் அரித்தல் ஏற்பட்டு அலை அரிமேடை தோன்றுகிறது. இதை பென்ச், திட்டு, திடல், சமவெளி எனவும் கூறுவர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## விரிவான விடையளி :

**1. வானிலை சிதைவு என்றால் என்ன ? வகைப்படுத்துக.**

வளிமண்டல நிகழ்வுகளோடு புவியின் மேற்பரப்பு நேரடியாக தொடர்பு கொள்வதால் பாறைகள் சிதைவடைவதையே வானிலை சிதைவு என்கிறோம்.

வானிலை சிதைவு மூன்று வகைப்படும். ஆவை

1. இயற்பியல் சிதைவு
2. இராசாயனச் சிதைவு
3. உயிரினச் சிதைவு

**1. இயற்பியல் சிதைவு :**

இயற்பியல் சக்திகால் பாறைகள் உடைபடுவதே இயற்பியல் சிதைவு எனப்படும்.

(எ.கா) வெப்பம், காற்று

**2. இராசாயனச் சிதைவு :**

இராசாய மாற்றங்கள் ஏற்படுவதால் பாறைகள் உடைபடுவது இராசாயனச் சிதைவு எனப்படும்.

(எ.கா) ஆக்ஸிகரணம், கார்பனாக்கம்

**3. உயிரினச் சிதைவு :**

தாவரங்கள், விலங்குகள், மற்றும் மனித செயல்பாடுகளால் பாறைகள் சிதைவுறுதலையே உயிரினச் சிதைவு என்கிறோம்.

(எ.கா) எலி, மண்புழு

**2. நிலத்தடி நீரின், அரித்தலால் உண்டாகும் நிலத்தோற்றங்களை விவரி.**

நிலத்தடி நீரின் அரித்தல் மற்றும் படிய வைத்தல் செயல்களால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் பின்வருமாறு.

**1. டெர்ரா ரோஸா :**

சுண்ணாம்பு நிலப்பிரதேசங்களில் சுண்ணாம்பு மண் கரைந்து சிதைவுற்ற பின்னர் எஞ்சிய செம்மண் இங்கு படியவைக்கப்படுவதால் ஏற்படுகிறது.

**2. லேப்பீஸ் :**

சுண்ணாம்பு பாறைகளிடையே நிலத்தடி நெளிந்து ஓடும் போது நீண்ட அரிப்புக் குடைவுகள் ஏற்படுகின்றன. இவற்றையே லேப்பீஸ் என அழைக்கப்படுகின்றன.

**3. உறிஞ்சு துளைகள் :**

சுண்ணாம்பு பாறைகள் கரைதலினால் ஏற்படும் புனல் வடிவப் பள்ளங்கள் உறிஞ்சுத் துளைகள் எனப்படுகின்றன.

**4. குகைகள் மற்றும் அடிநிலக் குகைகள் :**

கரியமில அமிலம் சுண்ணாம்பு பாறைகளில் வினைபுரிவதால் ஏற்படும் வெற்றிடம் குகைகள் எனப்படுகிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. பனியாறு என்றால் என்ன ? அதன் வகைகளை விளக்குக.**

பனிக்குவியல் மண்டலத்திலிருந்து பெரிய அளவிலான பனிக்கட்டிகள் மெதுவாக நகர்வதே பனியாறு எனப்படுகிறது.

**பனியாற்றின் வகைகள்:**

1. கண்டப் பனியாறுகள்
2. பள்ளத்தாக்கு பனியாறுகள்

**1. கண்டப் பனியாறுகள்:**

கண்டங்களில் அடர்ந்த பனியால் மூடப்பட்டிருக்கும் பரந்த நிலப்பரப்பு கண்டப் பனியாறு எனப்படும்.

**2. பள்ளத்தாக்கு பனியாறுகள்:**

பனிமூடிய மலைத்தொடர்களில் இருந்து உற்பத்தியாகும் பனியாறு பள்ளத்தாக்கு பனியாறு எனப்படும்.

**4. காற்றின் படிய வைத்தல் செயலினை விவரி.**

புதர்கள், காடுகள் மற்றும் பாறைகள் காற்று வீசும் திசைக்கு குறுக்கே அமைந்து அதன் வேகத்தை தடை செய்கிறது. இத்தடைகள் காற்றினால் கடத்தப்பட்ட படிவுகளை காற்று வீசும் பக்கத்திலும், அதன் மறு பக்கத்திலும் படிய வைக்கிறது.

**காற்று படிய வைத்தலால் உருவாகும் நிலத்தோற்றங்கள்**

1. மணல் மேடு
2. பர்கான்
3. குறுக்குமணல்மேடு
4. நீண்ட மணல்மேடு
5. காற்றடி வண்டல்

## அலகு 3 – வளிமண்டலம்

## காரணம் கூறுக.

**1. நிலநடுக்கோட்டு தாழ்வழுத்த மண்டலம் ஒரு அமைதிப் பகுதி.**

அதிக வெப்பத்தினால் காற்று விரிவடைந்து மேல் நோக்கிச் செல்வதால் தாழ்வழுத்தம் உருவாகிறது.

**2. மேக மூட்டத்துடன் இருக்கும் நாட்களை விட மேகமில்லாத நாட்கள் வெப்பமாக இருக்கிறது.**

மேக மூட்டமாக இருக்கும் நாட்களில் சூரியனின் கதிர்கள் பூமிக்கு குறைந்த வெப்பத்தையே ஏற்படுத்துகின்றன.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. மூடுபனி போக்குவரத்துக்கு ஆபத்தாக உள்ளது.**

எதிரில் வருபவர்கள் மற்றும் வாகனங்களை தெளிவாக பார்க்க முடியாத காரணத்தால் போக்குவரத்துக்கு ஆபத்தாக உள்ளது.

**4. வெப்பச்சலன மழை 4 மணி மழை என்று அழைக்கப்படுகிறது.**

நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் மாலை வேளைகளில் பொழியும் வெப்பச் சலன மழை 4 மணி மழை எனப்படுகிறது.

**5. துருவக் கீழைக் காற்றுகள் மிகக் குளிர்ச்சியாகவும் வறண்டும் காணப்படுகின்றன.**

துருவ உயர் அழுத்த மண்டலத்திலிருந்து துணை துருவ தாழ்வழுத்தத்தை நோக்கி இக்காற்று வீசுவதால் மிகக் குளிர்ந்து காணப்படுகிறது.

**<u>வேறுபடுத்துக.</u>**

| **1. வானிலை** | **காலநிலை** |
|---|---|
| 1. ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்படும் வளிமண்டல மாற்றத்தைப் பற்றி அறிவது வானிலை.<br>2. ஒவ்வொரு நாளும் கணக்கிடப்படும். | 1. நீண்ட காலத்திற்கு மிகப் பரந்த நிலப்பரப்பில் ஏற்படும் வானிலையின் சராசரி காலநிலை எனப்படும்.<br>2. 35 ஆண்டுகால வானிலைப் பதிவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. |
| **2. நிலக் காற்று** | **கடற்காற்று** |
| 1. காற்று நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது.<br>2. வெப்பத்தை சிறிது அதிகரிக்கிறது. | 1. காற்று கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது.<br>2. வெப்பத்தை சிறிது குறைக்கிறது. |
| **3.காற்று மோதும் பக்கம்** | **காற்று மோதாப் பக்கம்** |
| 1. காற்று வீசும் திசையை நோக்கி உள்ள மலைச்சரிவு காற்று மோதும் பக்கம் ஆகும்.<br>2. அதிக மழைப்பொழிவு பெறுகிறது. | 1. காற்று வீசும் திசைக்கு மறுபக்கம் உள்ள மலைச்சரிவு காற்று மோதாப் பக்கம் ஆகும்.<br>2. மிக குறைந்த அளவே மழையை பெறுகிறது. |
| **4 வெப்பச் சூறாவளி** | **மித வெப்பச் சூறாவளி** |
| 1. வெப்பச் சூறாவளிகள் வெப்ப மண்டலங்களுக்கு இடையேயான காற்றை ஒருமுகப்படுத்தும் பகுதிகளில் உருவாகிறது.<br>2. அதிக உயிர்சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தும். | 1. 35 டிகிரி முதல் 65 வடக்கு மற்றும் தெற்கு அட்ச பகுதிகளில் வெப்ப மற்றும் குளிர் காற்றுத் திரள்கள் சந்திக்கும் பகுதிகளில் உருவாகிறது.<br>2. நிலத்தை அடைந்தவுடன் வலுவிலக்காது. |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**சுருக்கமான விடையளி :**

**1. வளிமண்டலம் – வரையறு.**

புவியைச் சூழ்ந்து காணப்படும் காற்று படலம் வளிமண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

**2.காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை ?**

- ❖ நிலநடுக்கோட்டிலிருந்து தூரம்
- ❖ கடல் மட்டத்திலிருந்து உயரம்
- ❖ கடலிலிருந்து தூரம்
- ❖ வீசும் காற்றின் தன்மை
- ❖ மலைகளின் இடையூறு
- ❖ மேக மூட்டம்
- ❖ கடல் நீரோட்டங்கள்
- ❖ இயற்கை தாவரங்கள்

**3. வெப்பத் தலைகீழ் மாற்றம் – சிறு குறிப்பு வரைக.**

ஓர் இடத்தின் உயரத்தை கடல் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடும்போது ஒவ்வொரு 165 மீ உயரத்திற்கும் 11 C வெப்பநிலைக் குறையும். இதனை வெப்பத் தலைகீழ் மாற்றம் என்கிறோம்.

**4.வளிமண்டலத்தை வெப்பமாக்குகின்ற செயல்முறைகளை விளக்குக.**

- ❖ கதிர் வீச்சு
- ❖ வெப்பக் கடத்தல்
- ❖ வெப்பச் சலனம்
- ❖ வெப்பக்கிடை அசைவு

**5. கோள் காற்றுகளின் அமைப்பை விளக்குக.**

வருடம் முழுவதும் நிலையாக ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்று எனப்படும். இவை “நிலவும் காற்று” எனவும் அழைக்கப்படுகின்றன.

**6. சிறு குறிப்பு வரைக.**

**அ. <u>வியாபாரக் காற்றுகள்:</u>**

வட மற்றும் தென் அரைக்கோளத்திலுருந்து நிலநடுக்கோட்டு பகுதியை நோக்கி வீசும் காற்று வியாபாரக் காற்று எனப்படும்.

**ஆ. <u>கர்ஜிக்கும் நாற்பது:</u>**

மேலைக் காற்றுகள் மிகவும் வேகமாக வீசக் கூடியவை. எனவே இவை கர்ஜிக்கும் நாற்பது எனப்படுகிறது.

**7.மேகங்கள் எவ்வாறு உருவாகின்றன ?**

நீராவியிலிருந்து பெறப்பட்ட உப்புத்துகள்கள், புகை போன்றவற்றின் மீது குளிர்ந்த காற்று படிவதால் மேகங்கள் உருவாகின்றன.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

**8. மழைப் பொழிவின் வகைகள் யாவை ?**

- வெப்பச் சலன மழைப்பொழிவு
- சூறாவளி மழைப்பொழிவு
- மலைத் தடுப்பு மழைப்பொழிவு

**9.சிறு குறிப்பு வரைக.**

**அ. சாரல்:**

0.5 மி.மீட்டருக்கு குறைவான விட்டமுட்ட நீர்த்துளிகள் சீராக புவியை வந்தடைவது சாரல் என்கிறோம்.

**ஆ. மழை:**

காற்றில் மிக அதிகமான ஈரப்பதம் இருக்கும்போது விட்டம் 5 மி.மீட்டருக்கு மேல் உள்ள நீர்த்துளிகளின் பொழிவு மழை எனப்படும்.

**இ. ஆலங்கட்டி:**

முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒளிப்புகும் தன்மையுடன் கூடிய மிகச்சிறிய பனி உருண்டையுடன் கூடிய மழைப்பொழிவு ஆலங்கட்டி மழை எனப்படும்.

**ஈ. வெப்பமாதல்:**

ஒரு பொருள் அதன் இயல்பான வெப்பநிலையிலிருந்து அதிகரிப்பது வெப்பமாதல் எனப்படும்.

## ஒரு பத்தியில் விடையளி:

**1. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.**

வளிமண்டலம் ஐந்து அடுக்குகளாக காணப்படுகிறது.

அவை வளிமண்டல கீழடுக்கு, மீள் அடுக்கு, இடையடுக்கு, வெப்ப அடுக்கு, வெளியடுக்கு.

**1. வளிமண்டல கீழடுக்கு:**

நிலநடுக் கோட்டு பகுதியில் 18 கி.மீ உயரம், துருவப்பகுதியில் 8 கி.மீ உயரம். உயரம் செல்லச்செல்ல வெப்பநிலை குறையும்.

**2. மீள் அடுக்கு:**

50 கி.மீ வரை பரவியுள்ளது. ஓசோன் மூலக்கூறுகள் உள்ளன.

**3. இடையடுக்கு:**

80 கி.மீ வரை பரவியுள்ளது. வானொலி அலைகள் காணப்படுகிறது.

**4. வெப்ப அடுக்கு:**

600 கி.மீ வரை பரவியுள்ளது. அயனிகள், மின்னணுக்கள் காணப்படுகிறது.

**5. வெளியடுக்கு:**

அண்டவெளியோடு கலந்துவிடும் அமைப்பு.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**2. நிலையான காற்றுகளின் வகைகளை விளக்குக.**

வருடம் முழுவதும் நிலையாக ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள்காற்று எனப்படும்

வகைகள்:

1. வியாபாரக் காற்றுகள்
2. மேலைக் காற்றுகள்
3. துருவ கீழைக் காற்றுகள்

**1. வியாபாரக் காற்றுகள்:**

அதிக வலிமையுடனும் வருடம் முழுவதும் ஒரே திசையில் வீசி வியாபாரிகளின் கடல் வழி பயணத்திற்கு உதவுவதால் வியாபாரக் காற்றுகள் எனப்படுகிறது.

**2. மேலைக் காற்றுகள்:**

நிலையான காற்றுகள். மிகவும் வேகமாக வீசக்கூடியவை.

**3. துருவ கீழைக் காற்றுகள்:**

வலுவிழந்த காற்றுகள்.

**3. மேகங்களின் வகைகளை விவரி.**

**1. மேல்மட்ட மேகங்கள் = 6–20 கி.மீ உயரம் வரை**

கீற்று மேகங்கள் கீற்றுத்திரள் மேகங்கள் கீற்றுப்படை மேகங்கள்

**2. இடைப்பட்ட மேகங்கள் = 2.5 – 6 கி.மீ உயரம் வரை**

இடைப்பட்ட படை மேகங்கள் இடைப்பட்ட திரள் மேகங்கள்

**3. கீழ்மட்ட மேகங்கள் = புவியின் மேற்பரப்பிலிருந்து 2.5 கீ.மீ உயரம் வரை**

படைத்திரள் மேகங்கள் படை மேகங்கள் திரள் மேகங்கள் காத்திரள் மேகங்கள்

**4. சூறாவளி எவ்வாறு உருவாகின்றன ? அதன் வகைகளை விவரி.**

அதிக அழுத்தமுள்ள பகுதியிலிருந்து காற்று குறைந்த அழுத்தம் உள்ள பகுதிக்கு சுழல் வடிவத்தில் குவிவது சூறாவளி எனப்படுகிறது.

வகைகள்:

1. வெப்பச் சூறாவளி 2. மிதவெப்பச் சூறாவளி 3. கூடுதல் சூறாவளி

**1. வெப்பச் சூறாவளி:**

நீரும் நிலமும் வெவ்வெறு விகிதங்களில் வெப்பமடைவதால் உருவாகிறது.

**2. மித வெப்பச் சூறாவளி:**

குளிர்ப் பிரதேச பகுதிகளில் உருவாகும் இவை நிலப்பகுதியை அடைந்தவுடன் வலுவிழப்பதில்லை.

**3. கூடுதல் வெப்பச் சூறாவளி:**

மைய அட்ச சூறாவளிகள், லேசான சாரல் முதல் ஆலங்கட்டி மழை வரை பொழியும்



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**5. பொழிவின் வகைகளை விவரி.**

**அ. <u>சாரல்:</u>**

0.5மி. மீட்டருக்கு குறைவான விட்டமுடைய நீர்த்துளிகள் சீராக புவியை வந்தடைவது சாரல்.

**ஆ. <u>மழை:</u>**

காற்றில் மிக அதிகமான ஈரப்பதம் இருக்கும்போது விட்டம் 5.மி.மீ மேல் உள்ள நீர்த்துளிகளின் பொழிவு மழை.

**இ. <u>பனிப்பொழிவு</u> :**

உறையும் நிலைக்கு கீழாக நீர் சுருங்குவதால் ஏற்படும்போது பனிப்பொழிவு ஏற்படுகிறது.

**ஈ. <u>ஆலங்கட்டி மழை:</u>**

ஒளிப்புகும் தன்மையுடன் கூடிய மிகச்சிறிய பனிஉருண்டையுடன் கூடிய மழைப்பொழிவு ஆலங்கட்டி மழை எனப்படும்.

# 4. நீர்க்கோளம்

**<u>காரணம் கூறுக</u>**

**1. வட அரைக்கோளம் நில அரைக்கோளம் என்றும் தென் அரைக்கோளம் என்றும் நீர் அரைக்கோளம் எனவும் அழைக்கப்படுகின்றன.**

வட அரைக்கோளத்தில் நிலப்பகுதி அதிகமாகவும் தென் அரைக்கோளத்தில் நீர்ப்பகுதி அதிகமாகவும் காணப்படகிறது.

**2. கண்டத்திட்டுகள் சிறந்த மீன்பிடித்தளங்களாகும்.**

கண்டத்திட்டுகள் கடற்பாசி மற்றும் பிளாங்டன் நன்கு வளர்வதற்கு சாதகமாக உள்ளதால் மீன்பித்தளமாக விளங்குகிறது.

**<u>வேறுபடுத்துக.</u>**

| 1. உயர் ஓதம் | தாழ் ஓதம் |
|---|---|
| 1. புவி, சூரியன் மற்றும் சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது உயர் ஓதம் ஏற்படும்.<br>2. உயரமான அலைகள் .<br>3. அமாவாசை மற்றும் பௌர்ணமி. | 1. புவி, சூரியன் மற்றும் சந்திரன் மூன்றும் செங்குத்து கோணத்தில் வரும்போது தாழ் ஓதம் ஏற்படும்.<br>2. உயரம் குறைவான அலைகள்.<br>3. சந்திரன் முதல் மற்றும் இறுதி தினங்கள் |
| **2. கடலடிச் சமவெளி** | **கடலடிப் பள்ளம்** |
| 1. கண்ட உயர்ச்சியிலிருந்து மத்திய கடலடி மலைத்தொடர் வரை பரவியுள்ளது.<br>2. மென்சரிவைக் கொண்டது. | 1. பெருங்கடலின் மிக ஆழமான பகுதி அகழி ஆகும்.<br>2. மொத்த கடலில் 7 மேல் காணப்படும். |



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## சுருக்கமான விடையளி

**1. நீர்க் கோளம் பொருள் கூறுக.**

- ❖ நீர்க் கோளம் புவியில் காணப்படும் நீரின் பல்வேறு நிலைகளை உள்ளடக்கியது.
- ❖ புவியின் அனைத்து நீர் நிலைகளையும் தன்னுள் கொண்டது.

**2. நீரியல் சுழற்சி என்றால் என்ன ?**

- ❖ புவியின் மீது மேலும் கீழும் நீரின் இயக்கம் தொடர்ச்சியாக நடைபெறுவது நீரியல் சுழற்சி எனப்படும்.

**3. கடலடி நிலத்தோற்றங்கள் யாவை ?**

- ❖ கண்டத் திட்டு
- ❖ கண்டச் சரிவு
- ❖ கண்ட உயர்ச்சி
- ❖ கடலடி சமவெளி
- ❖ கடல் பள்ளம்
- ❖ கடலடி மலைத் தொடர்கள்

**4. கடல் நீரோட்டங்கள் தோற்றுவிக்கும் காரணிகள் யாவை ?**

- ❖ புவியின் சுழற்சி
- ❖ வீசும் காற்று
- ❖ கடல் நீரின் வெப்பம்
- ❖ உவர்ப்பியத்தில் உள்ள வேறுபாடு

**5. கடல் அலைகளைப் பற்றி சுருக்கமாக விடையளி.**

- ❖ கடல் நீர் தனது ஆற்றலை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கடத்தும் செயலை அலை என்கிறோம்.
- ❖ காற்றின் வேகம், திசையைப் பொறுத்து அலைகளின் உயரம் அமையும்.

## விரிவான விடையளி:

**1. கண்டத்திட்டு மற்றும் கண்டச் சரிவு பற்றிக் குறிப்பு வரைக.**

**கண்டத் திட்டு:**

- ❖ நிலத்திலிருந்து கடலை நோக்கி மென்சரிவுடன் கடலில் மூழ்கியுள்ள ஆழமற்ற பகுதியே கண்டத்திட்டு.
- ❖ மென் சரிவைக் கொண்டது.
- ❖ கடற்பாசி – பிளாங்டன் நன்றாக வளர்வதால் மீன்பிடித் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது.

**கண்டச் சரிவு:**

- ❖ கண்டத்திட்டின் விளிம்பிலிருந்து வன்சரிவுடன் ஆழ்கடலை நோக்கி சரிந்து காணப்படும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- கடலடிப் பள்ளத்தாக்குகள் – அகழிகள் காணப்படுகிறது.

**2. கடல் நீரோட்டங்கள் என்றால் என்ன ? அதன் வகைகளை விவரி ?**

பெருங்கடலின் மேற்பரப்பிலும் அதன் அடி ஆழத்திலும் ஒரு குறிப்பிட்ட திசையில் நகரும் நீரினை கடல் நீரோட்டம் எனப்படும்.

**கடல் நீரோட்டத்தின் வகைகள்:**

1. வெப்ப நீரோட்டம்
2. குளிர் நீரோட்டம்

**1. வெப்ப நீரோட்டம் :**

நிலநடுக்கோட்டு பகுதியிலிருந்து துருவப் பகுதிகளை நோக்கி நகரும் நீரோட்டங்கள் வெப்ப நீரோட்டம் எனப்படும்.

**2. குளிர் நீரோட்டம் :**

துருவப் பகுதியிலுருந்து நிலநடுக்கோட்டு பகுதியை நோக்கி நகரும் நீரோட்டங்கள் குளிர் நீரோட்டம் எனப்படும்.

**3. கடல் வளங்கள் மனித குலத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை ?**

- புவி மற்றும் மனித குலத்தின் உயிரோட்டமாக பெருங்கடல்களில் வளங்கள் விளங்குகின்றன.
- எண்ணெய் வளங்கள் அதிகமாக கிடைக்கிறது.
- மீன் பிடித்தளங்களாகத் திகழ்கின்றது.
- பொருளாதார மேம்பாடு கடல் வளத்தை சார்ந்தும் உள்ளது.
- சுற்றுலா தலங்களாகவும் திகழ்கின்றன.

## 5. உயிர்க்கோளம்

**காரணம் கூறுக.**

**1. உற்பத்தியாளர்கள், தற்சார்பு ஊட்ட உயிரிகள் என்று அழைக்கப்படுகின்றன.**

தனக்கு தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்து கொள்கின்றன.

**2. உயிர்க்கோளம் ஒரு நிலையான சூழல் மண்டலத்தைக் கொண்டுள்ளது.**

உயிரினங்கள் உயிர்வாழத் தேவையான சூழலைக் கொண்டுள்ளது

**வேறுபடுத்துக.**

| 1. உற்பத்தியாளர் | சிதைப்பவர் |
|---|---|
| தமக்கு வேண்டிய உணவைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளக்கூடியவை.<br>எ.கா. – தாவரங்கள், பாசி | தமக்கு வேண்டிய உணவைத் தாமே உற்பத்தி செய்ய இயலாதவை.<br>பூஞ்சைகள், காளான்கள் |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

| 2. நிலவாழ் பல்லுயிர்த் தொகுதி | நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி |
|---|---|
| நிலச்சூழலுக்கு ஏற்றவாறு குழுவாக வாழும் உயிரினங்கள்.<br>எ.கா – மான், யானை | நீர்ச்சூழலுக்கு ஏற்றவாறு குழுவாக வாழும் உயிரினங்கள்.<br>எ.கா – மீன்கள் |
| **3. வெப்ப மண்டலத் தாவரங்கள்** | **பாலை வனத் தாவரங்கள்** |
| ஆண்டு முழுவதும் அதிகமான வெப்பமும், மழைப்பொழிவும் உள்ள இடங்களில் காணப்படுகிறது.<br>எ.கா – இரப்பர், மூங்கில் – எபோனி | மிகக் குறைந்த மழைப்பொழிவு வறண்ட கால நிலையும் உள்ள இடங்களில் காணப்படுகிறது.<br>எ.கா – முட்புதர்கள், ஈச்சமரம் |
| **4. சவானா** | **தூந்திரா** |
| பரந்து விரிந்த புல்வெளிகளையும் சிறிய புதர்களையும் கொண்ட பிரதேசம்.<br>இங்கு காணப்படும் விலங்குகள் – சிறுத்தை, சிங்கம் | மரங்கள் அற்ற பனிமூடிய சமவெளி பிரதேசம்.<br>இங்கு காணப்படும் விலங்குகள் – துருவக்கரடி, முயல் |

## சுருக்கமான விடையளி:

**1. உயிர்க்கோளம் என்றால் என்ன ?**

- பாறைக் கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது.
- தாவரங்கள் மற்றும் விலங்குகள் உயிர்வாழ் ஏற்ற சூழலைக் கொண்டுள்ளது.

**2. சூழ்நிலை மண்டலம் என்றால் என்ன ?**

சூழ்நிலை மண்டலம் என்பது உயிருள்ளவை மற்றும் உயிரற்றவை ஒன்றையொன்று தொடர்பு கொண்டு வாழ்வது ஆகும்.

**3. உயிரினப் பன்மை என்றால் என்ன ?**

உயிரினப் பன்மை என்பது ஒரு வாழ்விடத்தில் வாழ்கின்ற பல்வேறு வகையான உயிரினங்களைக் குறிப்பதாகும்.

**4. "உயிரினப் பன்மை இழப்பு" என்பதன் பொருள் கூறுக.**

மனித மற்றும் இயற்கை காரணிகளின் செயல்பாடுகளினால் தாவர மற்றும் விலங்கினங்களில் ஏற்படும் இழப்பு "உயிரினப் பன்மை இழப்பு" என்கிறோம்.

**5. பல்வேறு வகையான நிலவாழ் பல்லுயிர்த் தொகுதிகளைக் குறிப்பிடுக.**

- வெப்ப மண்டலக் காடுகள் பல்லுயிர்த் தொகுதிகள்
- வெப்ப மண்டல சவானா பல்லுயிர்த் தொகுதி
- மித வெப்ப மண்டல புல்வெளி பல்லுயிர்த் தொகுதி
- பாலைவனப் பல்லுயிர்த் தொகுதி
- தூந்திரப் பல்லுயிர்த் தொகுதி


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**விரிவான விடையளி:**

**1. சூழ்நிலை மண்டலத்தின் பல்வேறு கூறுகளை விவரி**

சூழ்நிலை மண்டலம் மூன்று அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கியது.

1. உயிரற்ற கூறுகள் 2. உயிருள்ள கூறுகள் 3. ஆற்றல் கூறுகள்

1. **உயிரற்ற கூறுகள்:**

சுற்றுச்சூழலில் உள்ள உயிரற்ற பொருட்களைக்க குறிப்பது.

(எ.கா) ஒளி, மண், காற்று, நீர்

2. **உயிருள்ள கூறுகள்:**

தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகளை உள்ளடக்கியது.

இவை மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆவை

- உற்பத்தியாளர்கள் – தாவரங்கள், பாசி
- நுகர்வோர்கள் – ஆடு, சிங்கம்
- சிதைப்போர்கள் – பூஞ்சைகள், காளான்கள்

3. **ஆற்றல் கூறுகள்:**

- உயிரினங்கள் தம் பணியினைச் செய்ய ஆற்றல் தேவைப்படுகிறது.
- உயிர்க்கோளத்தில் சூரியனே ஆற்றலை வழங்கக் கூடியதாக உள்ளது.

**2. சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.**

1. **ஆற்றல் ஓட்டம்:**

- ஆற்றல் ஓட்டம் சூழ்நிலை மண்டலத்திலுள்ள அனைத்துப் பொருட்களின் சுழற்சிக்கும் உதவி செய்கிறது.
- இந்த ஆற்றல் ஓட்டம் பெரும்பாலும் சூழ்நிலை மண்டலத்தின் பல்வேறு நிலைகளில் படிநிலை ஒழுங்கு முறையில் நடைபெறுகிறது.

2. **உணவுச் சங்கிலி:**

- உயிரினங்களிடையே ஆற்றல் மாற்றம் தொடர்ச்சியாக நடைபெறுவது உணவுச் சங்கிலி எனப்படும்.

  (எ.கா) எலி–பாம்பு–கழுகு

3. **உணவு வலை:**

- உணவுச் சங்கிலிகள் இணைந்த சிக்கலான வலையமைப்பு உணவு வலை எனப்படும்.

**3. புவியில் உள்ள நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியை விவரி.**

நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி இரு பிரிவுகளாக உள்ளது.

1. **நன்னீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி:**

- நன்னீர் பகுதிகளான ஏரிகள், குளங்கள், ஆறுகள், ஓடைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- அல்லி, தாமரை, பாசியினத்தாவரங்கள்.
- ஆமை, முதலை, மீன்கள்

**2. கடல்வாழ் பல்லுயிர்த் தொகுதி:**

- புவியில் காணப்படும் மிகப் பெரிய நீர்த்தொகுதி.
- பல்வேறு வகையான தாவரங்கள், விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள்.
- மனித இனம் இத்தொகுதியை நீர், உணவு, பொழுதுபோக்கிற்கு பயன்படுத்துகிறது.

# 6. மனிதனும் சுற்றுச்சூழலும்

**காரணம் கூறுக.**

**1. காடுகளை மீட்டெடுத்தல் உலகம் முழுவதும் ஊக்கப்படுத்தப்படுகிறது.**

சுற்றுச்சூழலில் சமநிலையைப் பாதுகாக்க காடுகளை மீட்டெடுத்தல் அவசியமாகும்.

**2. அமில மழை சுற்றுச்சூழலை அழிக்கிறது.**

அமில மழை நீர்வாழ் உயிரினங்கள், மண்வளம் மற்றும் கட்டிடங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**3. நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை ஓர் அறிவுசார் பொருளாதாரம்.**

ஆலோசனை வழங்குதல், ஆராய்ச்சி, மற்றும் வளர்ச்சி போன்ற அறிவுசார் நடவடிக்கைகளுடன் தொடர்புடையது.

**4. மக்கள் தொகை வளர்ச்சி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.**

அடிப்படைத் தேவைகளுக்கு பற்றாக்குறை ஏற்படுவதால் மக்கள் வளர்ச்சி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

**5. வளம் குன்றா வளர்ச்சியின் இலக்குகள் புவியை பாதுகாப்பதாக இருக்கிறதா**

ஆம். எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்து நிகழ்காலத் தேவையை பூர்த்தி செய்வதாகும்.

**வேறுபடுத்துக.**

| 1. முதல் நிலைத் தொழில் | இரண்டாம் நிலைத் தொழில் |
|---|---|
| 1. முதல் நிலைத் தொழில் என்பது மூலப்பொருட்களை பயன்பாட்டிற்கு சேகரிப்பது முதல் நிலைத் தொழில் எனப்படும். | 1. இரண்டாம் நிலைத் தொழில் மூலப் பொருட்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றம் செய்யப்படுவது. |
| 2. வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் | 2. வாகன உற்பத்தித் தொழில் சாலைகள் |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## சுருக்கமான விடையளி:

**1. மக்கள் அடர்த்தி என்றால் என்ன ?**

ஒரு சதுர கி.மீ பரப்பளவில் வாழும் மக்களின் சராசரி எண்ணிக்கை ஆகும்

**2. கொள்ளை நோய் என்றால் என்ன ?**

புவியின் ஒருக் குறிப்பிட்ட பகுதியில் ஒரே நேரத்தில் தோன்றி அதிகமான எண்ணிக்கையில் மக்களைப் பாதிக்கும் நோய்.

(எ.கா) பிளேக்

**3. வரையறு:**

**அ. மக்கள் தொகை வளர்ச்சி:**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு.

**ஆ. மக்கள் தொகை கணக்கெடுப்பு:**

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசாங்கம் மக்கள் தொகை பற்றி கணக்கெடுப்பு நடத்தி தகவல்களைச் சேகரிப்பது.

**இ. வளம் குன்றா வளர்ச்சி:**

எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையையும் பூர்த்தி செய்வது.

## விரிவான விடையளி:

**1. மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை ?**

**அ. இயற்கை காரணிகள்:**

இயற்கை காரணிகளான வெப்பநிலை, மழை, மண், நிலத்தோற்றம், நீர், கனிம வளங்கள் போன்றவை மக்கள் தொகை பரவலை பாதிக்கின்றன.

**ஆ. வரலாற்று காரணிகள்:**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், ஆற்றங்கரை நாகரீகங்கள், போர் மற்றும் தொடர் ஆக்கிரமிப்புகள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துகின்றன.

**இ. பொருளாதாரக் காரணிகள்:**

கல்வி கூடங்கள், வேலை வாய்ப்புகள், உற்பத்தி தொழிற்சாலைகள், வியாபாரம் மற்றும் வணிகம் போன்றவை மக்களின் பரவலுக்குக் காரணமாகின்றன.

**2. கிராமக் குடியிருப்பு வகைகளை படத்துடன் விளக்குக.**

**1. செவ்வக வடிவக் குடியிருப்புகள்:**

- சமவெளிப் பகுதிகளிலும் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் காணப்படும்.
- சாலைகள் செவ்வக வடிவில் ஒன்றையொன்று செங்கோணங்களில் வெட்டிச் செல்லும்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**2. நேர்கோட்டுக் குடியிருப்புகள்:**

- ❖ குடியிருப்புகள் சாலை, தொடர்வண்டி பாதை, ஆற்றங்கரை மற்றும் அணைகட்டு ஓரங்களில் காணப்படுகின்றன.

**3. வட்ட வடிவக் குடியிருப்பு அல்லது அரைவட்ட வடிவ குடியிருப்புகள்:**

- ❖ ஏரிகள், குளங்கள் மற்றும் கடற்கரை பகுதிகளை சுற்றி குடியிருப்புகள் வட்டமாகவோ அல்லது அரைவட்டமாகவோ காணப்படுகின்றன.

**4. நட்சத்திர வடிவக் குடியிருப்புகள்:**

- ❖ கப்பியிடப்பட்ட அல்லது கப்பியிடப்படாத சாலை சந்திப்புகளின் ஓரங்களில் காணப்படுகின்றன. ஏல்லா திசைகளிலும் பரவிக் காணப்படும்.

**5. முக்கோணக் வடிவக் குடியிருப்புகள்:**

- ❖ ஆறுகள் ஒன்றாக சேரும் இடங்களில் காணப்படும் குடியிருப்புகள் முக்கோண வடிவக் குடியிருப்புகள்.

**6. T வடிவ, Y வடிவ, சிலுவை (அ) குறுக்கு வடிவக் குடியிருப்புகள்:**

- ❖ மூன்று சாலைகள் சந்திக்கும் இடங்களில் வளர்ச்சி அடையும்
- ❖ Y வடிவ குடியிருப்புகள் இரண்டு சாலைகள் மூன்றாவது சாலையுடன் சேரும் இடங்களில் காணப்படுகின்றன.
- ❖ குறுக்கு வடிவ சாலைகள் நான்கு சாலைகள் சந்திக்கும் இடங்களில் காணப்படுகின்றன.

## 7. நிலவரைபடத் திறன்கள்

**காரணம் கூறுக.**

**1. நிலவரைபடம் வரைதலில் செயற்கைகோள் பதிமங்கள் துணைபுரிகின்றன.**

செயற்கைகோள் பதிமங்கள் துல்லியமாக பயனுள்ள தகவல்களை தருகின்றன.

**2. புவியியல் வல்லுநர்களின் அடிப்படைக் கருவி நிலவரைபடம்.**

நிலவரைபடங்கள் வார்த்தைகள் மற்றும் குறியீடுகள் மூலம் புவியின் மேற்பரப்பை தெளிவாக திறம்பட விளக்குகிறது.

**3. நிலவரைபடத்தில் ஒரு குறிப்பிட்ட இடங்களைச் சுட்டிக்காட்ட புவி வலைபின்னல் அமைப்புப் பயன்படுகிறது.**

ஓர் இடத்தின் அமைவிடம் அதன் அட்சக்கோடு மற்றும் தீர்க்கக் கோடுகள் மூலம் வரையறுக்கப்படுகிறது.

**வேறுபடுத்துக.**

| 1. புவி மாதிரி | நிலவரைபடம் |
|---|---|
| 1. புவி அமைப்பின் மாதிரியில் செய்யப்பட்ட முப்பரிமாண வடிவம். | 1. நிலவரைபடம் என்பது காகிதம் துணி அல்லது தட்டையான மேற்பரப்பில் புவியின் வடிவத்தை சிறிய வடிவில் காட்டுவதாகும். |



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

| | |
|---|---|
| 2. புவி முழுமைக்கும் ஆன ஒரு அமைப்பாகும். | 2. நிலவரைபடத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் மற்றும் நிறங்கள் மூலம் பல விவரங்கள் அறியலாம். |
| | |
| **2. வான்வழிப் புகைப்படங்கள்** | **செயற்கைகோள் பதிமங்கள்** |
| 1. குறைந்த உயரத்தில் பறவைகள், பலூன்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்களில் பொருத்தப்பட்ட புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்படும் புகைப்படங்கள்.<br>2. வானிலை ஆய்வினை பாதிக்கும் | 1. வான்வெளியில் செலுத்தப்பட்ட செயற்கை கோளிலிருந்து எடுக்கப்படும் படங்கள்.<br>2. வானிலை அதிகம் பாதிக்காது. |
| **3.புவியியல் தகவல் அமைப்பு** | **உலகம் அமைவிடம் கண்டறியும் தொகுதி** |
| 1. கணினி வன்பொருள், மென்பொருள், புவித்தகவல்கள் மற்றும் பணியாளர் தொகுதி இணைந்த அமைப்பாகும்.<br>2. குறிப்பிட்ட தரவுகளைக் கொண்டு வரைபடத்தை உருவாக்கலாம். | 1. உலகளாவிய செயற்கோள் வழிநடத்தும் தொகுதி.<br>2. அமைவிடம், வேகம், காலம், ஆகியவற்றை எல்லா நேரமும் எல்லா காலநிலையிலும் தரவல்லது. |

**<u>சுருக்கமான விடையளி:</u>**

**1. நிலவரைபடம் என்றால் என்ன ?**

நிலவரைபடம் என்பது உலகை முழுமையாகவோ, அல்லது அதன் ஒரு பகுதியையோ தலைப்புவாரியாக காட்டவல்லது.

**2. நிலவரைபடத்தின் கூறுகள் யாவை ?**

1. தலைப்பு 2. அளவை 3. திசை 4. வலைபின்னல்அமைப்பு 5. கோட்டுச் சட்டம் 6. நிலவரைபடக் குறிப்பு 7. முறைக்குறியீடுகள்.

**3. A மற்றும் B ஆகிய இரு நகரத்துக்கு இடையான தூரம் 5.கி.மீ ஆகும். இது நிலவரைபடத்தில் 5.செ.மீ இடையாக குறிக்கப்பட்டுள்ளது. இந்த தூரத்தை கணக்கிட்டு பிரதிபின்ன முறையில் விடை தருக.**

1 கி.மீ = 100000 செ.மீ

5 கி.மீ = 5*100000 = 500000 செ.மீ

பிரதிபின்ன முறை = $\frac{\text{நிலவரைபட தூரம்}}{\text{புவிபரப்பின் தூரம்}} = \frac{5}{500000}$ = 5:500000



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**4.. நில அளவை செய்யப் பயன்படும் கருவிகளைக் கூறுக.**

1. சங்கிலி 2. பட்டகக் காந்தவட்டை 3. சமதளமேஜை 4. மட்டமானி 5. அப்னே மட்டம் 6. சாய்வுமானி 7. தியோடலைட்

**5.. தொலைநுண்ணுணர்வு – வரையறு.**

புவியில் உள்ள பொருட்களை நேரிடையாக தொடர்புகொள்ளாமல் தொலைவிலிருந்து உற்று நோக்கி தகவல்களை சேகரிப்பது ஆகும்.

**6.தொலை நுண்ணுணர்வின் கூறுகள் யாவை ?**

1. ஆற்றல் மூலம் 2. அனுப்பும் வழி 3. இலக்கு 4. உணர்வி.

**விரிவான விடையளி:**

**1. நிலவரைபடங்களில் அளவை என்பதன் பொருள் என்ன ? அதன் வகைகளை விளக்குக.**

அளவை என்பது நிலவரைபடத்தில் இரு புள்ளிகளுக்கும் புவிப்பரப்பில் அதே புள்ளிகளுக்கும் இடையிலுள்ள தூர விகிதம் ஆகும்.

**வகைகள்:** சொல்லளவை முறை, பிரதிபின்ன முறை, கோட்டளவை முறை

**சொல்லளவு முறை:**

நிலவரைபடத்திலுள்ள தூரம் மற்றும் புவியின் உண்மையான தூரத்தினை ஒப்பீடு செய்து சொற்களில் குறிப்பிடுவது சொல்லளவை.

பிரதிபின்ன முறை:

நிலவரைபட மற்றும் உண்மையான தூரங்களின் ஒப்பீடு விகிதமாகவோ, பின்னமாகவோ வெளிப்படுத்தப்படும்.

**கோட்டளவை முறை :**

நிலவரைபடங்களில் ஒரு நீண்ட கோடு பலசமபிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் நிலப்பரப்பில் எவ்வளவு தூரத்தை காட்டுகிறது என்பதை காட்டுவதே கோட்டளவை முறையாகும்.

**2. திசைகள் – தகுந்த படம் வரைந்து விளக்குக.**

- நிலவரைபடங்கள் வடதிசையை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்படுகின்றன.
- ஒரு நிலவரைபடத்தில் வடதிசை எப்போதும் புவியின் வடதுருவத்தை நோக்கியே இருக்கும்.
- ஒருவர் வடதிசையை பார்த்து நின்றால், வலக்கை கிழக்கு திசையையும் இடக்கை மேற்கு திசையையும் பின்புறம் தெற்கு திசையையும் காட்டும். இவை அடிப்படை திசைகளாகும்.
- பொதுவாக நிலவரைபடத்தின் மீது காணப்படும் அம்புமுனை வடக்கு திசையைக் குறிப்பிடும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. உலக அமைவிடத் தொகுதியின் பயன்களை விவரி.**

- ❖ கைபேசிகள், வாகனங்கள், கப்பல் கொள்கலன்கள், தானியங்கி பணபரிமாற்ற கருவிகள் அனைத்திலும் பயன்பாடு அதிகமாக உள்ளது.
- ❖ பயண தகவல்களை துல்லியமாக தருகிறது.
- ❖ நம்பிக்கையான சுற்றுலா வழிகாட்டியாக உள்ளது.
- ❖ பேரிடர் கால மீட்பு நடவடிக்கைகளில் GPS பயன்பாடு அதிகம்.
- ❖ ராணுவப் பயன்பாடு, போர்க்கால மீட்பு நடவடிக்கைகளில் பயன்படுகிறது.

# 8. பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல்

## குறுகிய விடையளி:

**1. பேரிடர் முதன்மை மீட்புக் குழு என்பவர் யார் ?**

1. காவலர்கள் 2. தீயணைப்புத்துறையினர் 3. அவசர மருத்துவ குழுக்கள்
4. தன்னார்வ தொண்டர்கள்.

**2. ஜப்பானில் மிக அதிக அடர்த்தியில் நிலநடுக்க வலை காணப்பட்டாலும் இந்தோனேஷியாவில் தான் மிக அதிக அளவில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஏன் ?**

ஜப்பானை விட இந்தோனேஷியா பரப்பளவு அதிகம் என்பதால் இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் அதிகம் ஏற்படுகிறது.

**3. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் எத்தனை ஆண்கள் பெண்கள் தீ விபத்தினால் இறக்கின்றனர் ?**

இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 42 சதவிகித பெண்களும் 21 சதவிகித ஆண்களும் தீ விபத்தினால் இறக்கின்றனர்.

**4. சுனாமிக்கு பிறகு என்ன செய்ய வேண்டும் ?**

- ❖ கட்டிடம் நீர் சூழ்ந்து காணப்பட்டால் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
- ❖ வீட்டில் எரிவாயு கசிகிறதா என பார்க்க வேண்டும்.

## விரிவான விடையளி:

**1. ஆழிப் பேரலையைப் பற்றிக் குறிப்பு வரைக.**

- ❖ நிலநடுக்கம், கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு போன்றவற்றால் ஏற்படும் பெரிய அலைகளே ஆழிப் பேரலை எனப்படும்.
- ❖ ஆழிப் பேரலைகள் 10–30 மீட்டர் உயரத்தில் மணிக்கு சுமார் 700–800 கி.மீ வேகம் செல்லக்கூடியது.
- ❖ வெள்ளப் பெருக்கை உண்டாக்கும்
- ❖ பெருமளவு உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

**2. நிலநடுக்கத்தின்போது கட்டடத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?**

- ❖ மேசையின் அடியில் மண்டியிட்டு அமர்ந்து மேசையின் காலை ஒரு கையால் பிடித்துக்கொண்டு தலையை மூடிக் கொள்ள வேண்டும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

- அறையின் மூலையில் குத்துக்காலிட்டு அமர்ந்து இரு கைகளாலும் தலையை மூடிக் கொள்ள வேண்டும்.
- கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.
- நிலநடுக்கம் முடியும் வரை உள்ளே பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

**3. ஆழிப் பேரலையை எவ்வாறு எதிர்கொள்வாய் ?**

- வீடு, பள்ளி, போன்றவை ஆழிப்பேரலை பாதிப்பிற்குட்பட்ட இடங்களா எனக் கண்டறிய வேண்டும்.
- பாதிக்கப்படும் இடங்களிலிருந்து வெளியேறும் வழியைத் திட்டமிட வேண்டும்.
- ஆழிப்பேரலையைப் பற்றி குடும்பத்துடன் கலந்துரையாட வேண்டும்.

**4. தீ விபத்தின்போது என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி குறிப்பு வரைக.**

- பதற்றப்படாமல் இருக்க வேண்டும்.
- கட்டிடத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும்.
- மின் தூக்கிகளை பயன்படுத்தக் கூடாது.
- தீ அபாய சங்கு பொத்தானை அழுத்தவும் அல்லது 112 ஐ அழைக்கவும்.
- கட்டிடத்தை விட்டு வெளியேறும் வழியில் புகையிருந்தால் தவழ்ந்து வெளியேற வேண்டும்.

# குடிமையியல்

## 1. அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

**சுருக்கமான விடையளி:**

**1. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறு.**

ஆப்ரகாம் லிங்கன் "மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி" என்று வரையறை செய்தார்.

**2. மக்களாட்சி அரசாங்க அமைப்பினைப் பற்றி கூறுக.**

- நாடாளுமன்ற அரசாங்க முறை – இந்தியா, இங்கிலாந்து
- அதிபர் அரசாங்க மறை – அமெரிக்கா, பிரான்ஸ்

**3. நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.**

| நேரடி மக்களாட்சி | மறைமுக மக்களாட்சி |
|---|---|
| 1. பொது விவகாரங்களில் மக்களே நேரடியாக முடிவெடுக்கும் அரசு முறை நேரடி மக்களாட்சி. | 1. பொது விவகாரங்களில் மக்கள் தங்களது விருப்பத்தை தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் வெளிப்படுத்தும் முறை மறைமுக |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

| | |
|---|---|
| எ.கா. பண்டைய கிரேக்க அரசுகள், சுவிட்ஜர்லாந்து | மக்களாட்சி. எ.கா. இந்தியா, அமெரிக்கா |

## விரிவான விடையளி:

**1. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை ? விவரி.**

- கல்வியறிவின்மை
- வறுமை
- பாலின பாகுபாடு
- பிராந்திய வாதம்
- சாதி, வகுப்பு, சமய வாதங்கள்
- ஊழல்
- அரசியல் குற்றமாதல்
- அரசியல் வன்முறை

**கல்வியறிவின்மை:**

கல்வியறிவின்மை காரணமாக உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறிய முடிவதில்லை.

**வறுமை:**

இந்தியாவில் பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கிறார்கள்.

**பாலின பாகுபாடு:**

ஆண், பெண் பாலின பாகுபாட்டில் ஆணாதிக்கம் மிகுந்து காணப்படுகிறது.

**2. இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்பட தேவையான நிலைமைகளை விளக்குக.**

- ஏழைகள் மற்றும் எழுத்தறிவற்றோருக்கு மக்களாட்சியின் பலன்கள் கிடைக்கச் செய்தல்.
- சமூக தீமைகள் மற்றும் கொடுமைகளை ஒழித்தல்.
- திறமைமிக்க ஊடகங்களின் தேவைகளை உணர்தல்.
- மக்கள் தங்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகளை கண்காணித்தல்.
- வலுவான பொறுப்பான எதிர்கட்சியாக இருத்தல்.
- மக்களிடையே சகிப்புத்தன்மை – மதநல்லிணக்கம் நிலவுதல்.

**3. இந்தியாவில் மக்களாட்சிப் பற்றிய உங்களது கருத்து என்ன ?**

- நம் நாட்டில் மக்களாட்சி முறை உலக நாடுகளால் பாராட்டு பெற்றாலும் அதனை இன்னும் மேம்படுத்த வேண்டும்.
- மக்களே தங்களை முன்மாதிரியாக பங்கெடுத்து செயல்பட வேண்டும்.
- அரசும், மக்கள் பிரதிநிதிகளும் கடமையுணர்வோடு செயல்பட வேண்டும்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகள் மக்களாட்சியின் தலையாய கொள்கைகளுடன் பொருந்தி செயல்பட வேண்டும்.
- அரசும் மக்களும் தங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

## 2. தேர்தல் அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

### சுருக்கமான விடையளி:

**1. இந்தியாவில் உள்ள தேர்தல் முறையைப் பற்றி விவரி.**

- இந்தியாவில் இரண்டு வகையான தேர்தல் முறைகள் உள்ளன. ஆவை
- நேரடித் தேர்தல் மற்றும் மறைமுக தேர்தல்
- நேரடித் தேர்தலில் வாக்காளர்கள் நேரடியாக பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனனர்.
  எ.கா MLA, MP
- மறைமுக தேர்தலில் மக்களின் பிரதிநிதிகள் வாக்களித்து தேர்வு செய்கின்றனர். எ.கா குடியரசுத் தலைவர்.

**2. அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.**

குறிப்பிட்டக் கொள்கையைக் கொண்ட மக்களின் குழு தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்படுத்தப்பட்ட அமைப்பு அரசியல் கட்சி ஆகும்.

**3. இருகட்சி ஆட்சி முறை மற்றும் பலகட்சி ஆட்சி முறையினை வேறுபடுத்துக.**

| இரு கட்சி முறை | பல கட்சி முறை |
|---|---|
| 1. இரு கட்சிகள் மட்டுமே பங்கு பெறுவது ஆகும்.<br>2. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து | 1. இரண்டிற்கு மேற்பட்ட கட்சிகள் பங்கு பெறுவது ஆகும்.<br>2. இந்தியா, பிரான்ஸ், இத்தாலி |

**4. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன ?**

- அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்ட சொல் அழுத்தக் குழுக்கள்.
- பொது நலன்களை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழுக்கள் ஆகும்.

### விரிவான விடையளி:

**1. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.**

**நேரடித் தேர்தல் நிறைகள் :**

- நேரடியாக தேர்ந்தெடுப்பதால் வலுவான மக்களாட்சி கொண்டது.
- அரசாங்க நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு கிடைக்கிறது.
- தகுதியான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வாய்பை தருகிறது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**குறைகள்:**

- அதிக செலவுடையது.
- வேட்பாளர்கள் பணம் பொருள் கொடுத்து ஏமாற்றுகின்றனர்.
- பொய்யான பரப்புரைகளால் தவறாக நடத்தப்படுகின்றனர்.

**2. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை ?**

- அரசியல் கட்சிகள் தேர்தலில் மக்கள் பணியாற்ற போட்டியிடுகின்றன.
- கொள்கைகள், திட்டங்களை முன்னிறுத்தி தேர்தலில் போட்டியிடுகின்றன.
- அரசுக்கும், மக்களுக்கும் இடையே பாலமாக செயல்படுகின்றன.
- மக்களுடன் சேர்ந்து போராடி மக்களின் கருத்தை முன்னிறுத்துகிறது.

**3. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள் யாவை ?**

**அரசியல்:**

- மக்களின் குறைகளை மனுக்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் செயல்பாடுகள் மூலம் ஆதரவை திரட்டி தங்களின் செல்வாக்கை விரிவுபடுத்துகிறது.

**கல்வி:**

- கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் துணைக் கொண்டு கருத்துகளைத் திரட்டி கல்வியை மேம்படுத்துகிறது.

**கொள்கை உருவாக்கம்:**

- அரசுக்கு தகவல் அளிப்பது, ஆலோசனை வழங்குவது என தனது பங்களிப்பை செய்து வருகின்றது.

## 3. மனித உரிமைகள்

**சுருக்கமான விடையளி:**

**1. மனித உரிமைகள் என்றால் என்ன ?**

எவ்வித வேறுபாடும் இல்லாமல் மனிதர்களாக பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை ஆகும்.

**2. அடிப்படை உரிமைகள் யாவை ?**

சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை, சுரண்டுலுக்கெதிரான உரிமை, சமய உரிமை, பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள், அரசியலமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை.

**3. குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா.சபை அறிவித்துள்ளவை யாவை ?**

வாழ்வதற்கான உரிமை, குடும்பச் சூழலுக்கான உரிமை, கல்விக்கான உரிமை, சமூக பாதுகாப்பு உரிமை, விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை.

**4. அரசியலமைப்புத் தீர்வு வழிகளுக்கான உரிமையைப் பற்றி சிறு குறிப்பு வரைக.**



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ❖ ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில் அரசியலமைப்பு தரும் தீர்வு காணும் உரிமையின்படி அந்த நபர் நீதிமன்றத்தை அணுகலாம்.
- ❖ நீதிமன்றம் அக்குடிமகனின் உரிமையை மீட்டு தர அரசுக்கு ஆணையிடும்.

**5. போக்சா (POCSO) வரையறு.**

பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து 18 வயது வரை உள்ள குழந்தைகளை பாதுகாக்கும் சட்டமே போக்சா ஆகும்.

**6. குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன் ?**

குழந்தைகள் வன்கொடுமைக்கு ஆளாகும்போது அவர்களுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுகிறது.

**7. தொழிலாளர் நலுக்காக பி.ஆர்.அம்பேத்காரின் பங்களிப்பு யாவை ?**

- ❖ தொழிற்சாலை வேலை நேரம் குறைப்பு
- ❖ தொழிலாளர் காப்பீட்டுக் கழகம்
- ❖ குறைந்தபட்ச ஊதியம்
- ❖ தொழிற்சங்கங்களின் கட்டயா அங்கீகாரம்

**8. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆனால் பெண்களுக்கான தனிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நியாயப்படுத்துக.**

குழந்தை திருமணம்,பாலியல் துன்புறுத்தல், பெண்சிசுக்கொலை, சமூகத்தில் சமமதிப்பின்மை, போன்ற காரணங்களால் பெண்கள் பாதிக்கப்படுவதால் அவர்களுக்கு தனிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**9. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் தொழிலாளர் நலனுக்காக அளித்த பங்களிப்பை பற்றி ஏதேனும் இரண்டு கூறு.**

- ❖ சம வேலை – சம ஊதியம்
- ❖ பணி நேர குறைப்பு – ஊதிய உயர்வு
- ❖ தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

**10. <u>வேறுபடுத்துக.</u>**

| மனித உரிமைகள் | அடிப்படை உரிமைகள் |
|---|---|
| 1. மனிதர்களாய் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை. 2. சுதந்திரம் சமத்துவம் ஆகியவற்றை நிலைநிறுத்தி உள்ளன. | 1. மனிதனின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள். 2. பேசும் உரிமை, வாழும் உரிமைகள் வழங்கி மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றியுள்ளன. |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## விரிவான விடையளி:

**1. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் பற்றி ஒரு பத்தியில் விடை தருக.**

- வெவ்வேறு சட்ட மற்றும் பண்பாட்டு பின்னணியுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்டது.
- இது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல்.
- 1948– ம் ஆண்டு டிசம்பர் 10–ல் ஐ.நா சபையால் நிறைவேற்றப்பட்டது.
- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- இதில் 30 உறுப்புகள் உள்ளன.
- இதில் உள்ள பெரும்பாலான உத்திரவாதங்கள் தரமிக்க விதிமுறைகளாக நிலைபெற்று விளங்குகின்றன.

**2. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன ?அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய் ?**

<u>அடிப்படைக் கடமைகள்:</u>

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்களின் கடமைகள் பொறுப்புகள் என்ற பொருளில் அமைந்துள்ளது.

**<u>பள்ளி வளாகத்தில் செயல்படுத்தும் விதம்:</u>**

- பள்ளியின் விதிமுறைகளை மதித்து நடப்பேன்.
- தேசிய சின்னங்களான தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை மதித்து நடப்பேன்.
- சக மாணவர்களுடன் ஒற்றுமையாக சகோதரத்துவம் பேணுவேன்.
- பள்ளியின் பொதுச் சொத்துகளை பாதுகாப்பேன்.

**3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது ?**

- தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993–ம் ஆண்டு அக்டோபர் 12–ம் நாள் அமைக்கப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பு.
- மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊக்குவித்தல்.
- மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துதல்.
- மனித உரிமைகள் குறித்த வழக்குகளில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்.
- அரசு சாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் முயற்சிகளை ஊக்குவித்தல்.

**4. தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை ?**

- சமத்துவத்திற்கான உரிமை
- பொது வேலை வாய்ப்பில் சமத்துவம்
- அமைப்புகள் சங்கம் தொடங்குவதற்கான உரிமை


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- வாழ்வாதார உரிமை
- கடத்தலைத் தடுத்தல்
- சம வேலை– சம ஊதியம்

# 4. அரசாங்கங்களின் வகைகள்

## வேறுபடுத்துக.

| 1. ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| 1. ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள்.<br>2. அதிகார பகிர்வு இல்லை. | 1. இரண்டு நிலையில் அரசாங்கம்.<br>2. அதிகார பகிர்வு உண்டு. |
| **2. நாடாளுமன்ற ஆட்சி முறை** | **அதிபர் மக்கள் ஆட்சி முறை** |
| 1. பெரும்பான்மை பெற்ற கட்சித் தலைவர் பிரதமர் ஆவார். 2. கூட்டுத் தலைமை | 1. குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.<br>2. தனிநபர் தலைமை |

**சுருக்கமான விடையளி:**

**1 . ஒற்றையாட்சி முறை.**

இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும்.

**கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:**

**1. அரசியலமைப்பின் வகைகளைப் பட்டியலிடுக.**

1. எழுதப்பட்ட /எழுதப்படாத அரசமைப்பு
2. கூட்டாட்சி/ ஒற்றையாட்சி
3. நெகிழும் தன்மையுடைய /நெகிழும் தன்மையற்ற.

**2. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை ?**

- மத்திய, மாநில அரசுகளிடையே அதிகார பகிர்வு
- சர்வாதிகாரப் போக்கைத் தடுத்தல்
- பெரிய நாடுகளுக்கு பொருத்தமானது
- பொருளாதார முன்னேற்றம்.

**3. ஒற்றையாட்சி, கூட்டாட்சி முறைக்கு இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

| ஒற்றையாட்சி | கூட்டாட்சி |
|---|---|
| 1. ஒரேயொரு அரசு | 1. இரண்டு நிலையில் அரசாங்கம் |
| 2. ஒரு குடியுரிமை | 2. இரட்டை குடியிருமை |
| 3. அதிகார பகிர்வு இல்லை | 3. அதிகார பகிர்வு உண்டு |
| 4. மையப்படுத்தப்பட்ட அதிகாரம் | 4. அதிகார பரவல் கொண்டது |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**விரிவான விடையளி:**

**1. ஒற்றையாட்சி முறைகளின் நிறைகளை விவரி**

- ❖ சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது
- ❖ அதிகாரம்–பொறுப்புகளுக்கிடையில் மோதல் இல்லை
- ❖ உடனடியாக முடிவெடுத்து துரிதமாக செயல்படுவது
- ❖ குறைந்த செலவுடையது
- ❖ ஒற்றையாட்சி ஒற்றுமை, சீரான சட்டம், கொள்கை, நிர்வாகத்திறனை உள்ளடக்கியது.

**2. அதிபர் ஆட்சி முறை குறிப்பு வரைக. மேலும் அதிபர் மக்களாட்சிக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.**

| அதிபர் மக்களாட்சி முறை | நாடாளுமன்ற மக்களாட்சி முறை |
|---|---|
| 1. அதிபர் மக்களாட்சி முறை நாடாளுமன்றத்திற்கு பொறுப்பில்லாத நிலைத்த நிர்வாக அமைப்புக் கொண்டது. | 1. பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதமர். |
| 2. அதிபரே அதிகாரம் படைத்தவர் | 2. மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது. |
| 3. தனிநபர் தலைமை | 3. கூட்டுத் தலைமை |
| 4. அரசாங்கத்தின் தலைவர் அதிபர் | 4. அரசாங்கத்தின் தலைவர் பிரதமர் |

## 5. உள்ளாட்சி அமைப்புகள்

**சுருக்கமான விடையளி:**

**1. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை ?**

1. சொத்து வரி 2. தொழில் வரி 3. வீட்டு வரி 4. நிலவரி 5. குடிநீர் இணைப்புக்கான கட்டணம் 6. கடைகள் மீது விதிக்கப்படும் வரி

**2. 1994 – ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை ?**

1. மூன்று அடுக்கு அமைப்பு 2. கிராம சபை 3. பட்டியல் இனத்தவர் பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு 4.பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு

**3. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை ?**

1. குடிநீர் வழங்குதல் 2. தெருவிளக்கு பராமரிப்பு 3. சாலைகள் பராமரிப்பு 4. கிராம நூலகங்கள் பராமரிப்பு 5. வடிகால் அமைத்தல் 6. தெருக்கால சுகாதாரம் பேணுதல்

**4. உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப்பணிகள் யாவை ?**

1. மரங்களை நடுதல் 2. சந்தை 3. திருவிழாக்கள் நடத்துதல் 4. விளையாட்டு பராமரிப்பு 5. வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களை ஒதுக்கீடு செய்தல்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**5. நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை ?**

1. பேரூராட்சி 2. நகராட்சி 3. மாநகராட்சி

## விரிவான விடையளி:

**1. 1992 ஆம் ஆண்டு 73 மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை ?**

- ஊராட்சி, நகராட்சிகள் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்களாக செயல்படும்.
- பதிவு செய்யப்பட்ட வாக்காளர் கொண்ட கிராம, நகராட்சி குழுக்கள்
- நேரடி தேர்தல் மூலம் அனைத்து இடங்களும் நிரப்பப்பட வேண்டும்,
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு
- ஐந்தாண்டு பதவி முடிந்தவுடன் உடனடியாக தேர்தல் நடைபெற வேண்டும்
- பட்டியல் – இனத்தவர் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு கொண்டு வர வேண்டும்.

**2. உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை ?**

- உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் – அதிகாரங்கள் பற்றி தெளிவான வரையறை இன்மை
- நிதி ஒதுக்கீடு மற்றும் தேவைகளின் மதிப்பீடு ஒத்துப்போவதில்லை
- சாதி மற்றும் சமயம் முக்கிய பங்கு பெறுதல்

# 6. சாலை பாதுகாப்பு

## சுருக்கமான விடையளி:

**1. இருசக்கர வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை ?**

- விபத்துகளில் தலைக்காயமே உயிருக்கு ஆபத்தை அளிக்கிறது.
- எனவே அதனைத் தடுக்க தலைக்கவசம் அணிய வேண்டும்.

**2. சாலை விபத்துக்கானக் காரணிகளைக் குறிப்பிடுக.**

1. அதிவேகம் 2. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது 3.கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவது 4. முறையான ஓட்டுநர் பயிற்சி

**3. சாலை சமிக்ஞையில் எந்த நிறம் "நில்" என்பதை உணர்த்துகிறது ?**

1. சிவப்பு நிறம்

**4. சாலை பாதுகாப்பு விதி ஏதேனும் மூன்றைக் கூறுக.**

- நில் ! கவனி ! செல் !
- இடதுபுறம் செல்லவும்.
- வளைவில் சாலையைக் கடக்காதீர்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

## விரிவான விடையளி:

**1. சாலை விபத்துக்கான காரணிகளை விவரி.**

**ஓட்டுநர்:**

அதிவேகம், சாலை விதிகளை மீறல், களைப்பு மற்றும் மது அருந்துவது.

**பாதசாரிகள்:**

கவனக்குறைவு, தவறான இடங்களில் சாலையைக் கடப்பது.

**பயணிகள்:**

கரம் சிரம் புறம் நீட்டுவது, படியில் பயணம்.

**வானிலை:**

மூடுபனி, பனி, கனமழை, புயல்.

**2. சாலை பாதுகாப்பு விதிகளைப் பற்றி விவரி.**

- பாதசாரிகள் கடக்கும் இடத்தில் சாலையை கடக்க வேண்டும்.
- இடது புறம் செல்லவும்.
- வளைவில் சாலையைக் கடக்க கூடாது.
- சாலையில் ஓடக்கூடாது.
- சாலை பாதுகாப்புக் குறிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டக் கூடாது.

# பொருளியல்

## 1. மேம்பாட்டை அறிவோம் தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத்தன்மை

### சுருக்கமான விடையளி:

**1. மேம்பாடு என்பதற்கு நீங்கள் என்ன பொருள் கொள்கிறீர்கள் ?**

மேம்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட துறை அல்லது குறிப்பிட்ட தனிநபரின் வளர்ச்சியைக் குறிக்கிறது.

**2. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன ?**

1. நிகர நாட்டு உற்பத்தி (NNP)
2. தனிநபர் வருமானம் (PCI)
3. வாங்கும் திறன் சமநிலை (PPP)
4. மனிதவள மேம்பாடு குறியீடு (HDI)

**3. ஒரு நாட்டின் வளர்ச்சியை பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு நிகர நாட்டு உற்பத்தி பயனுள்ள அளவீடாகக் கருதப்படாதது ஏன் ?**

- ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு இனமக்கள் வாழ்கின்றனர்.
- நாட்டின் மொத்த வருவாயை ஒப்பிட்டு சராசரி தனிநபர் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளதென்று சொல்ல முடியாது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**4. எந்த ஒரு நாட்டினுடைய முதன்மை வளமாக மனித வளம் கருதப்படுவது ஏன் ?**

மனித வளம் உற்பத்தித் துறையில் பயன்படுவதால் சமூகத்திற்கு பெரும் பங்களிப்பு தந்து அதிக வருமானம் அளிக்க முடியும்.

**5. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.**

NNP, PCI

NNP – Net National Product ( நிகர நாட்டு உற்பத்தி)

PCI – Per Capita Income (தனிநபர் வருமானம்)

**6. சூரிய சக்தி என்றால் என்ன ?**

சூரிய சக்தி என்பது சூரிய ஒளியை போட்டோவோல்டாயிக் செல்கள் மூலம் நேரடியாக மின்சக்தியாக மாற்றுவது ஆகும்.

**7. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.**

PPP – Purchasing Power Parity (வாங்கும் திறன் சமநிலை)

HDI – Human Development Index ( மனிதவள மேம்பாடு குறியீடு)

## விரிவான விடையளி:

**1. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.**

- நிலையான மேம்பாடு என்பது சுற்றுச்சூழலை தேசப்படுத்தாமல் பொருளாதார வளர்ச்சி அடைவது.
- புதுப்பிக்கக் கூடிய வளங்களை பயன்படுத்துதல்.
- வளங்களை பயன்படுத்தும்போது எதிர்கால சந்ததியினரையும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- சுற்றுச்சூழல் சீரழிவின் விளைவுகள் தேசிய எல்லைகளுக்கு உட்பட்டே உள்ளது.

**2. இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்.**

- இந்தியா தன் சுற்றுச்சூழல் கொள்கைகளைக் கடக்க முப்பது ஆண்டுகளாக உருவாக்கிக் கொண்டு வந்துள்ளது.
- காற்று–நீர்–மாசுபாடு–கழிவு மேலாண்மை –பல்லுயிர் பாதுகாப்பு பேன்ற சிக்கல்களைப் பாதுாக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.
- நிலையற்ற காலநிலை, குறைந்த வளங்களை எதிர்கொண்டு இந்தியா நிலையான மேம்பாடு அடைந்துள்ளது.
- உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

**3. புதுப்பிக்க தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் வேறுபடுத்துக.**

| புதுப்பிக்க தக்க வளங்கள் | புதுப்பிக்க தகாத வளங்கள் |
|---|---|
| 1. பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் புதுப்பிக்கக்கூடிய வளங்கள். | 1. பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் புதுப்பிக்க இயலாத வளங்கள். |



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| (எ.கா) சூரிய ஒளி – காற்று – நீர் | (எ.கா) நிலக்கரி, எரிவாயு |
| 2. மாசுபடுத்தாது | 2. மாசுபடுத்தும் |
| 3. மரபு சாரா உற்பத்தி வளங்கள் | 3. மரபு சார் உற்பத்தி வளங்கள் |

**4. ஏதேனும் 5 சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி.**

1. தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் 2010 – இயற்கை வளங்களை பாதுகாத்தல், காடுகள் பாதுகாப்பு

2. வன பாதுகாப்புச் சட்டம் 1980 – காடுகளை அழித்தல், தடை செய்தல் (மரங்களை வெட்டுதல்)

3. நீர் பாதுகாப்பு–மாசுபடுத்துதல் சட்டம் 1974 – ஆறுகள், ஏரிகள், குளங்கள் பராமரித்தல்

4. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 – சுற்றுச்சூழலை பாதுகாத்தல் – மேம்பட்ட அதிகாரங்கள் வழங்கல்.

## 2. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

### சுருக்கமான விடையளி:

**1. பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்றால் என்ன ?**

நாட்டில் வேலை செய்கின்ற மற்றும் வேலை செய்வதற்கான திறன் பெற்றுள்ள மக்களின் எண்ணிக்கை தொழிலாளர் சக்தி எனப்படும்.

**2. குழந்தைகளையும் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக் குழுக்களாக கருதக்கூடாது ?**

உற்பத்தி சார்ந்த வேலையைச் செய்ய உடல் ரீதியான தகுதிகளை அவர்கள் பெற்றிருப்பதில்லை.

**3. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை ?**

- ❖ முதன்மைத் துறை
- ❖ இரண்டாம் துறை
- ❖ மூன்றாம் துறை

### விரிவான விடையளி:

**1. விவரி அ.முதன்மைத் துறை ஆ. இரண்டாம் துறை இ. சார்புத் துறை**

**அ. முதன்மைத் துறை** – இது வேளாண்மைத் துறை, காடுகள், கால்நடை வளர்ப்பு போன்றவை

**ஆ. இரண்டாம் துறை** – தொழில் துறை மற்றும் உற்பத்தி, கட்டுமானம், சிறிய, பெரிய தொழிற்சாலைகள்.

**இ. சார்புத் துறை** – போக்குவரத்து, காப்பீடு, வங்கி, வணிகம்



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**2. இந்தியாவில் வேலைவாய்ப்பு அமைப்பை விளக்குக.**

- பணியமர்த்துவோர், அவர்களின் ஊழியர்களிடையே அதிக நெகிழ்ச்சியோடு பணிபுரியும் பாணி உருவாகியுள்ளது.
- சுய வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன,
- ஒரு சிலர் நிரந்தர பணியாளர்களாகவும் மற்றோர் குறுகிய கால ஒப்பந்த பணியாளர்களாகவும் உள்ளனர்.
- பகுதி நேர வேலைவாய்ப்புகள் வளர்ச்சி அடைந்துள்ளது.

**3. ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் நிலவுகின்ற வேலைவாய்ப்பை ஒப்பிடுக.**

| ஒழுங்கமைக்கப்பட்ட துறை | ஒழுங்கமைக்கப்படாத துறை |
|---|---|
| பதிவு செய்யப்பட்டது.<br>விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.<br>பணிப் பாதுகாப்பு உண்டு.<br>ஊதிய உயர்வு உண்டு.<br>மருத்துவ உதவித் தொகை, காப்பீடு உண்டு | பதிவு செய்யப்படாதது.<br>விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.<br>பணிப் பாதுகாப்பு இல்லை.<br>ஊதிய உயர்வு இல்லை.<br>மருத்துவ உதவித் தொகை, காப்பீடு இல்லை. |

**4. பொதுத்துறையும், தனியார் துறையும் வேறுபடுத்துக.**

| பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|
| சேவை நோக்கம் கொண்டது.<br>சொத்துகள் அரசுக்கு சொந்தம்.<br>ஊதியம் அரசால் வழங்கப்படும்.<br>எ.கா. BSNL, NLC. | இலாப நோக்கம் கொண்டது.<br>சொத்துக்கள் தனிநபர்களுக்கு சொந்தம்.<br>ஊதியம் நிறுவன ஊழியரால் வழங்கப்படும்.<br>எ.கா. ரிலையன்ஸ், TVS Motors. |

## 3. பணம் மற்றும் கடன்

### சுருக்கமான விடையளி:

**1. பணம் ஏன் கண்டுபிடிக்கப்பட்டது ?**

பண்டமாற்றுப் பொருட்களின் அளவு மற்றும் மதிப்பை கணக்கிடுவதில் உள்ள பிரச்சனைகளே பொதுவான மதிப்பு உள்ள உலோக பணம் கண்டுபிடிக்க காரணமாயிற்று.

**2. பண்டைய காலப் பணம் என்பது யாது ?**

தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் பண்டமாற்று முறைக்கு பதிலாக பயன்படுத்தப்பட்ட பண்டைய காலப் பணம் ஆகும்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

**3. பண்டைய காலத்தில் பண்டமாற்று முறையில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் யாவை ?**

தோல், ஓடுகள், உப்பு, புகையிலை, மீன்

**4. நறுமணப் பாதை என்றால் என்ன ? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

- ❖ தமிழகத்தின் கிழக்கு கடற்கரையில் இருந்து மிளகு மற்றும் நறுமணப் பொருட்கள், முத்து, ரத்தினங்கள், பருத்தி ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.
- ❖ இவற்றில் மிளகு மற்றும் நறுமணப் பொருட்கள் அதிகம் இடம் பெற்றதால் இந்த வணிகப்பாதை நறுமணப்பாதை என்றே அழைக்கப்பட்டது.

**5. இயற்கை பணம் என்றால் என்ன ?**

காலப்போக்கில் தங்கம், வெள்ளி போன்றவை உலகம் முழுவதும் மதிக்கப்படும் உலோகங்களாக ஏற்க்கப்பட்டன. பொது மதிப்பீடாக பயன்படுத்தப்படும் இவையே இயற்கையான பணம் எனப்பட்டது.

**6. குறைந்த மதிப்பிலான நாணயங்கள் ஏன் அதிகளவு அச்சடிக்கப்பட்டன ?**

தங்கம், வெள்ளி போன்றவை குறிப்பிட்ட அளவிற்கே இருப்பதால் குறைந்த மதிப்பு கொண்ட உலோகங்கள் மூலம் நாணயங்கள் அதிகளவு அச்சடிக்கப்பட்டன.

**7. அந்நிய செலவாணி என்றால் என்ன ?**

அந்நியச் செலாவணி என்பது நாடுகளுக்கிடையிலான பணம் ஆகும்.

**<u>விரிவான விடையளி:</u>**

**1. நவீன உலகில் பணப்பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது. என்பதை விவரி.**

இன்றைய வேகமான பொருளாதார சூழலில் பணபரிமாற்றங்கள் மின்னனு பணபரிமாற்றமாக மாறியுள்ளது.

**<u>ATM – தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்</u>**

இந்த அட்டை மூலம் பணத்தை எந்த நேரத்திலும் எடுக்கலாம்.

**<u>CREDIT CARD – கடன் அட்டை</u>**

முன்னதாக பணம் பெற்று பின்னர் செலுத்தும் வகையில் கடன் அட்டை பயன்படுகிறது.

**<u>NET BANKING – வலைதள பரிமாற்றம்</u>**

இதன் மூலம் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு நொடியில் பணப்பரிமாற்றம் செய்யலாம்.

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.**

- ❖ இந்தியாவில் பணத்தை அச்சடித்து புழக்கத்தில் விடுவதுதான் இந்திய ரிசர்வ் வங்கியின் முதன்மை பணியாகும்.
- ❖ பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது.
- ❖ விலைக் கட்டுப்பாட்டை ரிசர்வ் வங்கி கண்காணித்து வருகிறது.
- ❖ அந்நிய செலாவணி கையிருப்பு ரிசர்வ் வங்கியிடம் உள்ளது.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

- வங்கிகள் மற்றும் முறைசாரா நிதி நிறுவனங்களை கண்காணித்து கட்டுப்படுத்துகிறது.

**3. பணத்தின் செயல்பாடுகளை பட்டியலிடுக.**

- அனைத்துப் பொருட்கள் மற்றும் தேவைகளுக்கு பரிமாற்ற ஊடகம்
- பொருட்களின் மதிப்பைக் கணக்கிடுவதில் பணம் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- பணச் சேமிப்பு எதிர்கால வாங்கும் ஆற்றலை சேமிக்கிறது.
- நிதி பரிவர்த்தனைகளை அளவிடவும், கணக்குகளாக பராமரிக்கவும் பயன்படுகிறது.

# 4. தமிழ்நாடு வேளாண்மை

## சுருக்கமான விடையளி:

**1. உணவுப் பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவில்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.**

உணவுப் பயிர்கள் – நெல், சோளம்

உணவில்லாத பயிர்கள் – தென்னை, பனை

**2. பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான காரணிகள் யாவை ?**

1. மழைப்பொழிவு 2. நீர் இருப்பு 3. காலநிலை 4. சந்தை விலை போன்ற பல காரணிகள்.

**3. நிலத்தடி நீரின் அளவையும் தன்மையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது. ?**

- மத்திய நிலத்தடி நீர் வாரியம்.

**4. பயிர்களின் விளைச்சல் எதனைச் சார்ந்து இருக்கிறது ?**

பயிரிடப்படும் பரப்பளவு, உற்பத்தி திறன் ஆகியவற்றை சார்ந்து இருக்கிறது.

**5. சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.**

| சிறு விவசாயிகள் | குறு விவசாயிகள் |
|---|---|
| 1. 1 ஹெக்டேருக்கு குறைவான பரப்பில் செய்வோர்.<br>2. தமிழகம் – 78 விழுக்காடு உள்ளனர் | 1. 1–2 ஹெக்டேர் அளவிலான பரப்பில் சாகுபடி செய்வோர்.<br>2. தமிழகம் – 14 விழுக்காடு உள்ளனர். |

## விரிவான விடையளி

**1. தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தமிழகத்தின் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவ மழையாகும்.
- இம்மழை நீரை தேக்கங்கள், குளங்கள், கண்மாய்கள், ஏரிகளில் தேக்கி வேளாண்மை மேற்கொள்கின்றனர்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

- தென்மேற்குப் பருவ மழைப்பொழிவு அதிகமாக இருந்தால் தமிழகத்தில் காவிரி ஆற்றில் நீர் பெருகும்.
- வெளிக் கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் நீர் ஆதாரமாக திகழ்கிறது.

**2. வேளாண்மைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை ?**

- தமிழக வேளாண்மை நிலத்தடி நீரையே நம்பியுள்ளது.
- இது பல இன்னல்களுக்கு வழிவகுக்கும்.
- நிலத்தடி நீரை பயன்படுத்தும் அளவும் மழைப்பொழிவும் சமமாக இருந்தால் நல்லது.
- இதற்கு மாறாக நிலத்தடி நீரை பயன்படுத்தும் அளவு அதிகரித்தால் நீர் மட்டம் குறையும்.
- நீர் வற்றிப் போகலாம் அல்லது பாசனத்திற்கு உதவாத நீராக மாறவும் வாய்ப்புண்டு.

**3. வேளாண் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க.**

- தமிழக வேளாண்மை பெருமளவு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழையை சார்ந்து உள்ளது.
- பருவ மழை அதிகளவு பொழியும் போது ஆறுள், அணைக்கட்டுகள், நிரம்புகின்றன.
- கிணறுகள் 62, வாய்க்கால்கள் 24, ஏரிகள் 14 நீர் ஆதாரங்களாக உள்ளன.
- தமிழக வேளாண்மை நிலத்தடி நீரையே நம்பி உள்ளது.

## 5. இடம் பெயர்தல்

### சுருக்கமான விடையளி:

**1. இடம் பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியலிடுக.**

1. வேலை 2. தொழில் 3. திருமணம் 4. கல்வி 5. பிறப்பிற்கு பிறகு இடம்பெயர்தல்

**2. இந்தியாவில் பெண்கள் இடம்பெயர்தலுக்கான முக்கிய காரணங்கள் யாவை ?**

பெண்கள் இடம்பெயர்தலுக்கான காரணம் திருமணம்.

**3. மிகக் குறைவான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக.**

கடலூர், வேலூர், சேலம், நாமக்கல்

**4. ஏழை மக்கள் மற்றும் வசதி வாய்ப்புடைய மக்கள் இடம்பெயர்வதற்கான காரணங்கள் யாவை ?**

ஏழை மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காகவும் வசதி வாய்ப்புடைய மக்கள் தங்கள் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவும் இடம் பெயர்கின்றனர்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

**5. தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் செல்லும் நான்கு நாடுகள் மற்றும் சதவீதத்தினைப் பட்டியலிடுக.**

| நாடுகள் | | சதவீதம் |
|---|---|---|
| 1. சிங்கப்பூர் | – | 20% |
| 2. ஐக்கிய அரபு எமிரேட் | – | 18% |
| 3. சவுதி அரேபியா | – | 16% |
| 4. ஐக்கிய அமெரிக்க நாடுகள் | – | 13% |

**6. இடம்பெயர்ந்தோர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்களைப் பற்றி ஆய்வுகள் வெளிப்படுத்துவது யாது ?**

மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும், சாதாரணமாக செய்யக் கூடிய வேலைகளிலும் நடுத்தரமான வேலைகளிலும் இடம் பெயர்ந்தவர்கள் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## விரிவான விடையளி:

**1. இடப்பெயர்வு கொள்கையின் நோக்கங்கள் யாவை ?**

- ❖ கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையை குறைக்கும் விதத்தில் இருக்க வேண்டும்.
- ❖ நிலப்பரப்புச் சார்ந்த குடிபெயர்தல் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும். இதனை சரிபடுத்தும் விதத்தில் பொருத்தமான உத்திகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

**2. இடப் பெயர்வின் முறைளைப் பற்றி கலந்துரையாடுக.**

**உள் நகர்வுகள்:**

கிராமம் – கிராமம்
கிராமம் – நகரம்
நகரம் – கிராமம்
நகரம் – நகரம் நோக்கிய இடப் பெயர்வுகள்

**நீண்ட தூர இடப்பெயர்வுகள்:**

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட தூர இடப்பெயர்வுகள்.

**சுழற்சி முறையிலான நகர்வுகள்:**

நீண்ட கால நிரந்தர இடப்பெயர்வு மற்றும் குறுகிய கால சுழற்சி முறையிலான நகர்வுகள்.

**3. தமிழ்நாட்டின் இடப்பெயர்வில் காணப்படும் ஆர்வமுள்ள தகவல்கள் சிலவற்றை தெளிவுபடுத்துக.**


- ❖ இடப்பெயர்தல் கிராமப்புறங்களில் மிக அதிகம்
- ❖ ஆண்களை விட பெண்களின் இடப்பெயர்வு அதிகம்.
- ❖ தமிழ்நாட்டில் ஐந்து பேரில் இருவர் இடம் பெயர்ந்தவர்.
- ❖ தமிழகத்தில் இருந்து இடம்பெயர்பவர்கள் சிங்கப்பூர், சவுதி அரேபியா, குவைத், கத்தார் போன்ற நாடுகளைத் தேர்வு செய்கின்றனர்.

**ALL THE BEST**

Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-2. பண்டைய நாகரிகங்கள்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-3. தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net


# அலகு - 4. அறிவு மலர்ச்சியும், சமூக - அரசியல் மாற்றங்களும்






Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com


# அலகு-5. செவ்வியல் உலகம்






Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

# அலகு-7. இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு - 8. நவீன யுகத்தின் தொடக்கம்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net


# அலகு-1. புவி அகச்செயல்பாடுகள்






Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

# அலகு-2. புவி புறச்செயல்பாடுகள்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-4. நீர்க்கோளம்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-5. உயிர்க்கோளம்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-6. மனிதனும் சுற்றுச்சூழலும்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு - 6. மனிதனும் சுற்றுச்சூழலும்







Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.padasalai.Net

# அலகு-7. நிலவரைபடத் திறன்கள்






Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com